# உடைந்த இரவு

## 1

தினேஷ் டெண்டர் சம்பந்தமான பைல் ஒன்றை பார்வையிட்டுக் கொண்டிருந்த அந்த மத்தியான வேளையில் மேஜைமேல் இருந்த டெலிபோன் முணுமுணுத்துக் கூப்பிட்டது.

அந்த முப்பது வயது தினேஷ் ரிசீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்.

"ஹலோ.."

மறுமுனையில் ஒரு பெண் குரல் கேட்டது.

"மிஸ்டர் தினேஷ் ப்ளீஸ்."

"ஹோல்டிங்.."

"ஓ.. நீங்கதானா.. நான் பவ்யா"

"எந்த பவ்யா?"

"பார்த்தீங்களா.. மறந்துட்டீங்களே..!"

"சாரி. தப்பா நினைச்சுக்காதீங்க.. கொஞ்சம் ஆபிஸ் டென்ஷன்.. அதனாலதான் சட்டுனு ஞாபகத்துக்கு வரலை"

"சிரமப்படாதீங்க மிஸ்டர் தினேஷ். இந்தச் சின்ன வயசிலேயே ஒரு பெரிய கம்பெனியைக் கட்டிக் காக்கற உங்களுக்கு என்னை மாதிரி ஒருசில மணி நேரமே பழகிய பெண்ணை

**- ராஜேஷ்குமார்**

ஞாபகம் வெச்சுக்கறது கஷ்டம்தான்.. நான் ஸ்வீட் ஷேர் அமைப்புக்கான பிரஸிடெண்ட். நீங்களும் உங்க மனைவியும் போன வாரம் நாங்க கண்டக்ட் பண்ணின ஒரு பங்ஷனுக்கு வந்தீங்களே..! நினைவிருக்கா..?"

"ம். சொல்லுங்க பவ்யா.."

"எங்க ஸ்வீட் ஷேர் அமைப்பு வருஷா வருஷம் ஒரு புதுமையான போட்டியை நடத்திட்டு வருது.."

"என்ன அது?"

"நாங்க வருஷா வருஷம் சிட்டி பூராவும் சர்வே பண்ணி வெற்றிகரமான கணவன் மனைவியரைக் கண்டுபிடித்து ஒரு அவார்டு தர்றோம். இந்த வருஷம் நீங்க தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கீங்க.."

"வெரி.. வெரி.. தேங்ஸ் பவ்யா.."

"இந்த விஷயத்தை உங்க மனைவிகிட்ட கன்வே பண்ணிடறீங்களா?"

"ஓ ஷ்யூர். மத்தியானம் நான் சாப்பிடப் போறபோது சொல்லிடறேன்.."

"தேங்க் யூ சார்.."

மனசுக்குள் சந்தோஷம் முட்டியது. மைத்ரேயிக்கு விஷயம் தெரிஞ்சா மகிழ்ச்சியின் உச்சிக்கே போய் விடுவாள்.

"என்னைக் கல்யாணம் பண்ணிகிட்ட பின்னாடிதானே உங்க கம்பெனி ஒரு கணிசமான அளவுக்கு டெவலப் ஆச்சுது.." இது அவள் அடிக்கடி சொல்கிற வாசகம்.



அது உண்மைதான். இப்போது இந்த விஷயமும் தெரிஞ்சா கண்டிப்பா துள்ளிக் குதிப்பாள். உடனே பார்த்துக் கொண்டிருந்த பைல்களை தள்ளிவைத்துவிட்டு கழுத்து டையை இறுக்கியபடி எழுந்தான்.

"சோமு.."

"சார்.." அட்டெண்டர் கதவைத் திறந்து பார்த்தான்.

"நான் வெளியே கிளம்பறேன். ஏதாவது போன் வந்தா மெஸேஜ் நோட் பண்ணி வை."

"சரி சார்.."

வேகநடைபோட்டு போர்டிகோவுக்கு வந்து காத்திருந்த பிங்க் நிற காண்டஸா காரில் ஏறி அதற்கு உயிர் கொடுத்து கிளப்பினான்.

மத்தியான சென்னை அமில வெய்யிலில் இருந்தது டிராபிக்கைக் கடந்து பங்களாவுக்கு வந்தபோது மணி 1.50

நிறுத்திவிட்டுப் போய் காலிங் பெல்லை அழுத்தினான். திறந்த மைத்ரேயி ஆச்சர்யப் பட்டாள்.

"ரொம்பப் பசி போலிருக்கு.."

"ஆமா.."

டைனிங் டேபிளில் இருவரும் அமர்ந்தார் கள். விஷயத்தைச் சொன்னான்.

"ஈஸிட்.." புருவம் உயர்த்தி ஆச்சர்யம் காட்டினாள்.

"கூடிய சீக்கிரம் விழா வெச்சு பரிசு தரப்

போறாங்க.." சென்னவன் முகம் கழுவ பாத்ரூமை நோக்கிப் போனான்.

தினேஷ் பாத்ரூமுக்குள் நுழைய மைத்ரேயி சட்டென்று ஸ்டோர் ரூமுக்குள் போனாள். அங்கே சுவரோரமாய்த் தெரிந்த பழைய பீரோவுக்குப் பக்கத்தில் நின்று குரல் கொடுத்தாள்.

"பாஸ்கர்.."

"என்ன மைத்ரேயி, உன்னோட புருஷன் மத்தியானம் வர மாட்டான்னு சொன்னே.. ஆனா வந்திருக்கான்...?" சொன்னபடியே ஒரு இளைஞன் வெளிப்பட்டான்.

"எனக்கென்ன தெரியும் பாஸ்கர். திடீர்னு வந்துட்டாரு.."

"நம்ம விஷயம் தெரிஞ்சிருக்குமா..?"

"இல்லை. அந்தளவுக்கு அவருக்கு அறிவு பத்தாது. மத்தியானம் சாப்பாட்டுக்குத்தான் வந்திருக்காரு.."

"சாப்பிட்டதும் உம்புருஷன் இங்கியே டேரா போட்டுடுவானா..?"

"விடுவேனா.. சாப்பிட்டதும் நேரா ஆபீஸுக்குத் துரத்திடுவேனே...! சரி. பாஸ்கர். நான் குரல் கொடுக்கற வரைக்கும் சத்தமில்லாம இங்கேயே இரு.."

சடாரென்று வெளிப்பட்டு டைனிங் டேபிளைத் தொட்டாள். படபடத்த இதயத்துடன் தட்டை எடுத்து வைத்தாள். தினேஷ் முகம் கழுவிவிட்டு டவலால் ஈரத்தை ஒற்றியபடியே வந்தான்.



## 2

டைனிங் டேபிளுக்கு வந்து உட்கார்ந்த தினேஷ் தட்டில் பரிமாறிய பச்சடியை எடுத்து வாயில் போட்டுக் கொண்டே மைத்ரேயியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

"என்னோட வாழ்க்கையின் மிகப்பெரிய அதிர்ஷ்டம் எது தெரியுமா மைத்ரேயி..?"

"எது..?"

"நீதான்.."

"அப்பாடா.. இன்னிக்காவது ஒத்துகிட்டீங்களே..!" சிரித்துக் கொண்டே சாதத்தைப் பரிமாறினாள் மைத்ரேயி.

"ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்கிற உண்மையைச் சொன்ன நபர் யார்னு தெரிஞ்சா, அந்த நபரை வரவழைச்சு ஒரு பெரிய பாராட்டு விழாவையே நடத்துவேன்.."

மைத்ரேயி சிரித்தாள்.

"அதுக்கு நாம, சொர்க்கத்துக்குத்தான் போகணும்..? சாதத்துக்கு சாம்பார் விட்டுப் பிசைந்து ஒரு வாய் சோற்றை விழுங்கிய விநாடி ஹாலில் இருந்த டெலிபோன் அடித்தது.

"போய்ப்பாரு மைத்ரேயி.."

மைத்ரேயி இரண்டு அறைகளைக் கடந்து போய் ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ.."

"மேடம்.. நான் கம்பெனியிலிருந்து அக்கவுண்டன்ட் பேசறேன்.."

"எம்.டி. அங்க இருக்காரா மேடம்..?"

"ம். இருக்காரு.."

"வந்து.. நம்ம கம்பெனிக்கு ரிசர்வ் பேங்க்லயிருந்து செக்கிங் வந்திருக்காங்க.."

"சரி. உடனே அவரை அனுப்பி வைக்கறேன்."

தினேஷ் கேட்டான். "போன்ல யாரு மைத்ரேயி..?"

"கம்பெனிக்கு செக்கிங் வந்திருக்காங் களாம். உங்கள உடனே வரச் சொல்றாங்க.."

"என்னது..?" பரபரப்புடன் எழுந்தான் தினேஷ்.

"ஏங்க.. சாப்பிட்டுட்டுப் போங்க.." அவள் குரலைப் பொருட்படுத்தாமல் காரை நோக்கி ஓடினான். கார் விருட்டென்று காம்பவுண்ட் கேட்டைத் தாண்டிப் போவதைப் பார்த்ததும் தான் மைத்ரேயிக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

உடனே ஸ்டோர் ரூமை நோக்கிப் போனாள்.

"பாஸ்கி.. வெளிய வாங்க.."

"என்ன மைத்ரேயி. அதுக்குள்ள தினேஷ் போயிட்டாரு.."

"அது கெடக்கட்டும். வாங்க போகலாம்.." அவன் கையை கெட்டியாகப் பிடித்து இழுத்துக்



கொண்டு பெட்ரூமுக்குப் போனாள்.

போம் மெத்தையில் பாஸ்கர் சாய.. அவனுடைய மார்பில் மைத்ரேயி சாய்ந்தாள். சில விநாடி இடைவெளிக்குப் பின் கூப்பிட்டாள்.

"தினேஷ். என்னதான் அவர் தாலி கட்டினாலும் நீ என்னோட காலேஜ்லயிருந்தே லவ்வர். நம்ம கெட்ட நேரம் லவ் தோத்துப் போயிடுச்சு.. ஆனா பாஸ்கி.. என்னோட புருஷன் என்னைத் தொடும்போதெல்லாம் உங்களுக்கு நான் துரோகம் பண்றதாகத்தான் நினைப்பேன்."

"சரி. நம்ம விஷயம் தினேஷுக்குத் தெரியாம இருக்கறதுக்கு ஒரு வழி இருக்குன்னியே.. என்ன அது?"

"தினேஷ் உயிரோடு இருக்கக் கூடாது.."

"மை...த்...ரே....யி..."

"ஏன் பயப்படறே பாஸ்கர்.."

"இது ரொம்பத் தப்பு மைத்ரேயி.."

"நாம லைப் லாங் இப்படியே இருக்கணும்னா இது தப்பே இல்ல.."

ஹால் டெலிபோன் ஒலித்தது.

"அடச்சே.. இது வேற அப்பப்ப...?" சலிப்புடன் சென்று எடுத்தாள்.

"ஹலோ.."

"மைத்ரேயி இது நியாயமா..?"

"என்ன..?"

"புருஷன் கட்டிய தாலி கழுத்துல இருக்கறபோது கட்டிலை வேற ஒருத்தன்கூட பகிர்ந்துக்கறியே.. இது நியாயமா..?"

"யா.. யார்.. நீ.. நீ...?"

குரல் சிரித்தபடியே கேட்டது கொஞ்சலாய்.

"என்னைத் தெரியலையா மைத்ரேயி..?"

## 3

"என்னைத் தெரியலையா மைத்ரேயி..?"

"யா.. யார்.. நீ...?"

"மனச்சாட்சி.. ஹா.. ஹா... ஹா..."

பலத்த சிரிப்புடன் மறுமுனை வைக்கப்பட மைத்ரேயி கை நடுக்கத்துடன் ரிசீவரை கவிழ்த்தாள்.

பாஸ்கர் பக்கத்தில் வந்து அவனுடைய தோளைத் தொட்டான்.

"பா.. பாஸ்கி..."

"ம்.."

"போன்ல ஒரு பொண்ணு நம்ம விஷயத்தைத் தெரிஞ்சிட்டு மொரட்றா.. நியாமான்னு கேட்கறா..?"

"யா.. ரு..?"

"மனச்சாட்சியாம்.."

"யாராயிருக்கும்...?"

"பயமாயிருக்கு பாஸ்கி.. தினேஷுக்குத்



தெரிஞ்சா...?"

"பயப்படாதே. அவ நம்மகிட்ட மட்டும்தான் டீல் பண்ணுவா போலிருக்கு.. இந்த விஷயத்தை மொதல்ல கிளியர் பண்ணிட்டு அப்புறமா உன் புருஷனை முடிச்சிடலாம்..."

"பா.. பாஸ்கர். கொஞ்ச நாளைக்கு நாம சந்திக்காம இருந்தா என்ன?"

"ஐயோ என்னால முடியாது..."

"நீ கிளம்பு பாஸ்கர். அவ மறுபடியும் போன் பண்ணினா நான் உனக்குத் தகவல் தர்றேன்.."

பாஸ்கர், மைத்ரேயியின் நெற்றியில் ஒரு முத்தமிட்டு அவளுடைய கன்னத்தை தட்டிவிட்டு நகர்ந்தான்.

* * * * *

தினேஷ் செக்கிங் ஆட்களை அனுப்பி விட்டு வீட்டுக்கு வந்தபோது இருட்டிக் கொண்டிருந்தது.

போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு ஹால் சோபாவுக்குச் சாய்ந்தான். மைத்ரேயி உள்ளேயிருந்து வந்தாள். கேட்டாள்.

"என்ன இங்கேயே உட்கார்ந்துட்டீங்க..? என்ன ஆச்சு..?"

"எல்லாம் முடிஞ்சது. பிரச்னை சால்வ்.."

டெலிபோன் ஒலிக்க, சட்டென்று தினேஷ் எடுத்தான்.

"ஹலோ.."

"........"

"ஒரு நிமிஷம்.." மைத்ரேயியிடம் ரிசீவரை நீட்டினான்.

மைத்ரேயி ரிசீவரை வாங்கிக் காதுக்குக் கொடுத்தாள்.

"எஸ்.."

"நான் மனச்சாட்சி..."

அந்தக் குரலைக் கேட்டதுமே மைத்ரேயியின் தலைக்குள் கோபரத்தம் பாய்ந்தது. தினேஷ் உள்ளேயிருந்த பாத்ரூமை நோக்கிப் போக, மைத்ரேயி கொஞ்சம் அமைதி காத்துவிட்டு குரலைத் ததாழ்த்திக் கொண்டு பொரிந்தாள்.

"உனக்கு என் வேணும்..?"

"நியாயம்.. நேர்மை.."

"இதோ பார் நீ எதுக்குப் போன் பண்றேன்னு எனக்குத் தெரியும்..? உனக்கு எவ்வளவு பணம் வேணும்..?"

"பணத்துக்கு ஆசைப்படற பஜாரி நான் இல்லை.. எனக்கு வாக்குறுதி வேணும்.."

"என்னன்னு..?"

"இனிமே நீ உன்னோட புருஷனுக்கு துரோகம் பண்ணக் கூடாது. அந்த பாஸ்கரைக் கட் பண்ணிடு.."

"இல்லேன்னா...?"

"உன்னோட கணவரோட காதுக்கு விஷயத்தைக் கொண்டு போறதைத் தவிர எனக்கு வேற வழியில்லை.."



## 4

மைத்ரேயி யோசித்தாள்.

'யார் இவள்..?'

'பரிச்சயம் இல்லாத குரல்..'

'ஒருவேளை வேண்டுமென்றே குரலை மாற்றிப் பேசுகிறாளோ..?'

'இவளை எப்படிக் கண்டுபிடிப்பது?'

'உன் கணவரோட காதுக்கு விஷயத்தைக் கொண்டு போறதைத் தவிர வேற வழியில்லை..'

'ஒருவாரம் அவகாசம் கொடுத்திருக்கிறாள்..'

'உண்மையிலேயே விஷயத்தைச் சொல்லி விடுவாளா..?'

'கணவனிடம் விஷயம் போவதற்குள் அவள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்..'

*****.

மறுநாள் கலை. 11 மணி.

பக்கத்தில் இருந்த டெலிபோன் ஒலிக்க எடுத்துப் பேசினாள்.

"ஹலோ.."

"மைத்ரேயி.. நான்தான்... இப்ப அவசரமா டெல்லி கிளம்பிட்டிருக்கேன். டிரைவர் இப்போ

வீட்டுக்கு வருவான். ரெண்டு செட் டிரஸ் கொடுத்தனுப்பு."

"என்ன திடீர்னு டெல்லி பயணம்..?"

"நாம புதுசா ஆரம்பிக்கப் போற ஷேர் மார்கெட் கம்பெனிக்கு டிக்ளரேஷன் வாங்கத்தான்."

"எப்ப வருவீங்க..?"

"மினிமம் ரெண்டு நாள்ல வந்திருவேன்.. சரி. உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும்.."

"ஒண்ணும் வேண்டாம். நீங்க சீக்கிரமா வந்தாப் போதும்.."

"நீ இப்படித்தான் சொல்லுவே.. நானே வாங்கிட்டு வர்றேன். பார். நீ அசந்தே போய்டுவே..."

"சரி. டெல்லி போன உடனே போன் பண்ணுங்க.."

"முதல் போனே உனக்குத்தான்."

மறுமுனையில் தினேஷ் ரிசீவரை வைக்க, உதட்டைக் கடித்துக் கொண்டே உட்கார்ந்தாள்.

கணவன் வெளியூர் போவது மனசுக்கு சந்தோஷமாக இருந்தாலும் அந்த டெலிபோன் பெண் நினைவில் வந்து வயிற்றைக் கலக்கினாள்.

'அவள் யார் என்பதைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும்..'

'கணவன் டெல்லிக்குப் போவதை



பாஸ்கருக்குத் தெரியப் படுத்த வேண்டும்..'

காலிங் பெல் தொடர்ந்து ஒலிக்க.. நினைவு கலைந்து எழுந்து சென்று திறந்தாள்.

ஒரு இளம் பெண் தோளில் வானிடி பேக்கும் உதட்டில் புன்னகையுமாய் நின்றிருந்தாள்.

## 5

**வா**சல் படியில் நின்றிருந்த அந்தப் பெண்ணைப் பார்வையில் வாங்கிய மைத்ரேயி மெல்லிய குரலில் கேட்டாள்.

"எஸ்.. யார் வேணும்..?"

"மிஸஸ் மைத்ரேயி.."

"ஆமா.."

"நான் தமிழ்ச்செல்வி.. திலகம் பத்திரிகையோட உதவி ஆசிரியர்.."

"ஓ.. வாங்க.. உங்க பத்திரிகையோட விசிறி நான்.."

மைத்ரேயி தமிழ்ச் செல்வியை வரவேற்று ஹால் சோபாவில் உட்கார வைத்தாள்.

"என்ன விஷயமா வந்திருக்கீங்க..?"

"ஸ்வீட் ஷேர் அமைப்பின் மூலமா நீங்க சக்சஸ்புல் உமனா தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கீங்க.."

"ஆமா.."

"அதுக்காக உங்களை ஒரு பேட்டி

எடுக்கணும்.."

"வாவ்.. ஆறு இலட்சம் பிரதிகள் விக்கற உங்க பத்திரிகைல என்னோட பேட்டியா.. ரொம்ப சந்தோஷம்.."

"சரி. ஆரம்பிக்கலாமா..? ஒரு ஆணோட வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் 50 சதவிகிதம் இருக்கிறாள். உண்மையா..?"

ஹால் டெலிபோன் ஒலிக்க.. மைத்ரேயி திரும்பினாள்.

"ஓ.கே.. போய் அட்டெண்ட் பண்ணிட்டு வாங்க.. பிறகு தொடரலாம்.."

"ஹலோ."

"நான் பாஸ்கர்.."

"என்ன இந்த நேரத்துல.."

"கரடி வீட்ல இருக்கா..?"

"இல்ல டெல்லி போயாச்சு.. ஆனா திலகம் பத்திரிகைல என்னை பேட்டி எடுத்துட்டு இருக்காங்க.."

"சரி நான் எப்போ வரட்டும்..?"

"சாயந்திரம் ஏழு மணிக்கு நானே போன் பண்றேன்.."

பேட்டி தொடர்ந்தது.

"உங்க வாழ்க்கையோட இலட்சியமா எதை நினைக்கறீங்க?"

"என்னோட கணவர்க்கு நிறைஞ்ச மனைவியா நான் எப்போதும் இருக்கணும்.."



மறுபடியும் டெலிபோன் ஒலிக்க. சலிப்புடன் எழுந்தாள் மைத்ரேயி.

"போய் பேசிட்டு வாங்க. உங்க மாதிரி பெரிய எடத்துப் பெண்களுக்கு போன் வர்றது சகஜம்தானே.."

எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ யாரு...?"

"நான் மனச்சாட்சி.."

"இப்ப உனக்கு என்ன வேணும்..?"

"உன்னோட கணவர் டெல்லிக்குப் போயாச்சா..?"

"ஆமா.. அதுக்கென்ன இப்போ?"

"புருஷன் இல்லைங்கறதுக்காக சோரம் போயிடாதே.. அவர் வர்ற வரைக்கும் நீ சுத்தமா இருக்கணும்.. இல்லேன்னா உன்னெ கோர்ட்ல நிறுத்திடுவேன்.."

"யூ... ப்ளடி.. பிட்ச்..." அடித் தொண்டையில் சத்தம் வெளியே கேட்காதபடிக்கு கத்திவிட்டு ரிசீவரை தட்டென்று சாத்தினாள்.

## 6

மைத்ரேயி ரிசீவரை வைத்துவிட்டு கோபம் கொந்தளிக்கும் மனதோடு ஹாலை நோக்கி வந்தாள். மூளைக்குள் கேள்விகள் வெடித்தன.

'போனில் யார் அவள்..?'

'அவளை எப்படிக் கண்டுபிடிப்பது?'

சோபாவில் காத்திருந்த தமிழ்ச்செல்வி புன்னகையோடு மைத்ரேயியை ஏறிட்டாள்.

"பேட்டியை கன்டினியூ பண்ணலாமா?"

"ஸாரி. நான் கொஞ்சம் அவசரமா வெளிய கிளம்ப வேண்டியிருக்கு.. இன்னொரு நாளைக்கு கன்டினியூ பண்ணலாமே..!"

"ஓ..கே.." அவள் எழுந்து வெளியேறியதும் டெலிபோனில் எண்களைத் தட்டினாள்.

"பாஸ்கர்.."

"என்ன மைத்ரேயி..."

"நான் கொஞ்சம் அர்ஜென்ட்டா உன்னப் பார்த்துப் பேசணும்.. நீ நேரா பேனியன் அவென்யூவுக்கு வந்திடு.."

"சரி. உடனே வர்றேன்.."

மைத்ரேயி ரிசீவரை வைத்துவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு போர்டிகோவுக்கு வந்தாள்.

காத்திருந்த மாருதிக்குள் நுழைந்து டிரைவிங் சீட்டை ஆக்கிரமித்து இக்னீஷியனை உசுப்பினாள்.

* * * * *

போட் கிளப் ரோடு.

பேனியன் அவென்யூ அந்த மத்தியான வேளையில் ஆள் அரவமற்று நிசப்தமாய் இருந்தது. காற்று கூடத் தயங்கித் தயங்கித் தான் வீசியது.

அடர்த்தியாய் ஆல மரங்கள் மண்டிய



பகுதிக்குள் காரை நுழைத்த மைத்ரேயி, ஒரு பெரிய மரத்துக்குப் பின்னால் போய் நிறுத்தினாள். பாஸ்கர் கண்ணில் தட்டுப்படவே இல்லை.

ஸ்டீயரிங்கைப் பிடித்தபடி டிரைவிங் சீட்டுக்குச் சாய, மனசுக்குள் டெலிபோனில் பேசிய அந்தப் பெண் வந்தாள்.

'யார் அவள்?'

'எனக்குத் தெரிந்தவளா?'

'இல்லை.. தினேஷுக்குத் தெரிந்தவளா?'

யோசனையில் பத்து நிமிஷம் கரைந்த போது பைக் படபடக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

பாஸ்கர்தான்.

பைக்கை நிறுத்திவிட்டுக் காருக்குள் வந்தான் பாஸ்கர்.

"என்ன மைத்ரேயி.. உம்புருஷன் டெல்லி போயிட்டானா..? இல்லையா?"

"ம்.. போய்ட்டார்.."

"சரி.. வேறென்ன ப்ராப்ளம்..?"

"ஒரு பொண்ணு டெலிபோன் பண்ணி என்னை மிரட்டிட்டிருக்காள்னு சொன்னேனே!"

"ஆமா.."

"அவ யார்னு உடனே கண்டுபிடிச்சாகணும் பாஸ்கர்.."

"அவ என்னதான் சொல்றா..?"

"கட்டின புருஷனுக்குத் துரோகம் பண்ணக் கூடாதாம். இல்லேன்னா கோர்ட்ல கொண்டு போய் நிறுத்துவாளாம்.."

"மைத்ரேயி உன் புருஷன் டெல்லி போற விஷயம் யார் யாருக்குத் தெரியும்..?"

"முதல்ல ஆபீசுக்கு.. பிறகு எனக்கு..?"

"அப்படீன்னா.. அவ கண்டிப்பா உங்களோட கம்பெனியில வேல பார்க்கற வளாகத்தான் இருப்பா.."

"ஆனா.. வேற வேற செக்ஷன்கள்ல மொத்தம் 70 பேர் இருக்காங்க.. யார்னு கண்டு பிடிக்கறது.."

"மைத்ரேயி.. நீ உடனே உன்னோட கம்பெனிக்குப் போ.. அங்கே போய் சுத்திப் பாரு. உன்ன யாரும் கேள்வி கேட்க முடியாது. ஒவ்வொரு பெண்ணையும் கவனி.. பேசிப் பாரு. முகபாவத்தை நோட் பண்ணு. கண்டிப்பா அதுல ஏதாவது பட்சி மாட்டும்.."

"இது ஒர்க்அவுட் ஆகுமா பாஸ்கர்..?"

"போய்ப் பார்த்தாதானே தெரியும்..?"

## 7

'குட் ஈவினிங்' சொன்ன அட்மினிஸ்ட்ரேஷன் ஆபிசரை புன்னகையுடன் பார்த்து விட்டுக் கடந்தாள்.

உள்ளே போய் எம்.டி. நாற்காலியில் உட்கார்ந்தாள்.



"ஜி.எம் இருக்காரா?"

"இருக்கார மேடம்.."

"வரச் சொல்லுங்க.."

சுமார் ஐந்து நிமிட இடைவெளிக்குப் பின் "குட் ஈவினிங் மேடம்.."என்றபடியே ஜி.எம். வந்தார்.

"நான் ஆபீசுக்கு வந்தது ஆச்சரியமா இருக்கா..?"

"கொஞ்சம்.."

"வீட்ல போர் அடிச்சது அதான் வந்தேன். நாம போய் சுத்திப் பார்க்கலாமா?"

"வெல்கம் மேடம்.."

வழியில் ஆங்காங்கே பெண்கள் தெரிந்தார்கள். டைப் தட்டிக் கொண்டு பைலைப் புரட்டிக் கொண்டு கம்ப்யூட்டரின் மானிட்டரின் திரையை உற்றுப் பார்த்துக் கொண்டு.

"ஜி.எம். சார். எம்.டி. டெல்லிக்குப் போயிருக்கற விஷயம் அத்தனை பேருக்கும் தெரியுமா?"

"இல்ல மேடம் ஆபிஸ்ல இருக்கறவங்களுக்கு மட்டும்தான் தெரியும்.."

"அங்க மொத்தம் எத்தனை பெண்கள் இருக்காங்க.."

"நாற்பத்தியோரு பேர் மேடம்.."

மைத்ரேயி கண்களை அகல விரித்துக் கொண்டு அவர்களை நோட் பண்ணினாள்.

ஆனாலும் அவரவர்கள் தத்தமது வேலை களைப் பார்த்த வண்ணமே இருந்ததால் ஒன்றும் புலப்படவில்லை.

* * * * *

ராத்திரி மணி 11 மணி. மைத்ரேயியின் பங்களா.

படுக்கையறையில் ஜீரோ வாட்ஸ் வெளிச்ச மழையில் பாஸ்கரும், மைத்ரேயியும் நனைந்து கொண்டிருந்தார்கள். பாஸ்கரின் வலுவான அணைப்பில் மைத்ரேயி.

பாஸ்கர் கேட்டான்.

"ஆபிஸ் போனியே என்னாச்சு..?"

"சந்தேகத்துக்கு இடமான பதினொரு பேர்களோட அட்ரஸைக் கொண்டு வந்திருக்கேன்."

"கொண்டா பார்க்கலாம்.."

மைத்ரேயி எழ முயன்ற விநாடி டெலிபோன் மணி அடித்தது.

"மைத்ரேயி. நான் இங்கே இருக்கற ரிசீவர்ல யார்னு நோட் பண்றேன். நீ அங்கே போய்ப் பேசு.."

"ஹலோ.."

மறுமுனையில் பெண் குரல் சிரித்தது.

"என்ன மைத்ரேயி.. நான் யார்னு கண்டுபிடிக்க ஆபிஸுக்கே வந்துட்டே போலிருக்கு..?"



## 8

டெலிபோனில் அந்தப் பெண்ணின் குரலைக் கேட்டதும், மைத்ரேயி சில விநாடிகளுக்கு மௌனத்தைக் காட்ட, குரல் சிரித்தது.

"என்ன மைத்ரேயி... எதுன்னு முடிவு பண்ணிட்டியா..?"

"இத பார். இது என்னோட சொந்த வாழ்க்கைப் பிரச்னை.. நீ யார் இதுல தலையிட.. உனக்கு என்ன வேணும்..?"

"நீ திருந்தணும்.. இல்லேன்னா.. அவர்கிட்ட விஷயம் போயிடும்.. நாளைக்கு சரியா இதே நேரத்துக்கு உன்கிட்டே இருந்து உறுதிமொழி வேணும். இல்லேன்னா.. உன்னோட மானம் சந்தி சிரிக்கும்.."

மைத்ரேயி மேற்கொண்டு பேசுவதற்குள் மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டது.

ஆத்திரம் தலைக்கேறியிருக்க, மைத்ரேயியும் ரிசீவரை லொட்டென்று வைத்துவிட்டு அங்கிருந்த சோபாவில் சாய்ந்தாள். பாஸ்கர் பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான்.

"மைத்ரேயி.. டெலிபோன்ல மிரட்டினவ கண்டிப்பா உன்னோட ஆபிஸ்லதான் வேலை பார்க்கறா.. நோ டவுட்.."

"எப்படி சொல்றீங்க..?"

"பேசும்போது ஒரு மில்லோட சைரன் சத்தம் கேட்டது."

"ஈஸிட். அத மட்டும் வெச்சிட்டு எப்பட
கண்டுபிடிக்கறது?

"அது எனக்குத் தெரியும். ஆவடியில இருக்கற சந்திரா காட்டன் மில்லோட சைரன்தான்.."

"என்ன சொல்றே பாஸ்கர்.."

"நீ நோட் பண்ணியிருக்கற முகவரியில ஆவடியில இருந்து வர்ற பெண்கள் யாருன்னு கவனி.."

மறுபடியும் டெலிபோன் ஒலிக்க, கலக்கத்துடன் எடுத்தாள்.

"மைத்ரேயி.. நான்தான்.." உற்சாகக் குரலில் தினேஷ்.

"இப்பதாங்க உங்கள நினைச்சேன்.. நீங்க இல்லாம எப்படியோ இருக்கு.. எப்ப வருவீங்க..?"

"நான் நாளைக்கு வர முடியாது. இன்னும் ரெண்டு நாள் ஆகலாம் மைத்ரேயி..."

"ஏன் இப்படி என்னப் படுத்தறீங்க.. ரெண்டு நாள்னு சொல்லிட்டு நாலு நாள் பண்ணினா நான் என்ன பண்றது?"

"சாரி மைத்ரேயி.. ஒரு அர்ஜெண்ட் ஒர்க். வீடு வந்ததும் நீ தர்ற பனிஷ்மெண்ட் எதுவாயிருந்தாலும ஏத்துக்கறேன்."

"சரி. சாப்பிட்டீங்களா..?"

"ம். இப்பதான். ஓ.கே. மைத்ரேயி.. நான் மறுபடியும் காலைல போன் பண்றேன்.."



மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டுவிட மைத்ரேயி ரிசீவரை வைத்துவிட்டு பாஸ்கரைப் பார்த்தாள்.

"நீ மட்டும் ஒரு நடிகையா இருந்தா உனக்கு ஊர்வசி அவார்டே தரலாம்.."

"என்ன கிண்டலா..? அந்த பெண்ணைக் கண்டுபிடிக்க என்ன ஐடியா வெச்சிருக்கே..?"

"கவலப்படாதே. அத நான் பார்த்துக்கறேன். அந்தப் பெண்ணைத் தீர்த்துக் கட்டினதும் அடுத்து உன் புருஷன்தான். அதுக்கப்புறம் நம்ம ரெண்டு பேருக்கும் ஜாலிதான்."

"எனக்கு நம்பிக்கை வர மாட்டேங்குது பாஸ்கர்.. என்ன செய்யலாம்?"

"புலம்பாம வா.. படுக்கைக்குப் போகலாம். சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்துல சஞ்சலம் எதுக்கு..?" இருவரும் எழுந்தனர்.

ஹால் டியூப்லைட்டை அணைத்துவிட்டு படுக்கையறையை நோக்கி நகர்ந்த விநாடி -

அந்த சத்தம் கேட்டது.

"பீங்க்க்க்..."

கார் ஹார்ன் சத்தம்.

பங்களாவுக்கு வெளியே காம்பவுண்ட் கேட் அருகேயிருந்து அந்த சத்தம் எழுந்தது.

மைத்ரேயி வேகவேகமாய் போய் ஹால் ஜன்னல் திரையை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தாள்.

காம்பவுண்ட் கேட்டுக்கு வெளியே ஹெட்

லைட் வெளிச்சக் கண்களோடு ஒரு க
நின்றிருந்தது.

## 9

மைத்ரேயியின் தண்டுவடம் உடனே
குளிர்ந்தது.

'இந்த நேரத்துக்கு யார்..?'

'அதுவும் காரில்..'

முதுகுக்குப் பின்னால் வந்து நின்ற பாஸ்க
சன்னமான குரலில் கேட்டான்.

"மைத்ரேயி.. யாரது?"

"தெரியலையே..?"

"போய்ப் பார்.. நான் வழக்கம்போல ஸ்டோ
ரூமுக்குள்ள ஒளிஞ்சுக்கறேன்.
வந்திருக்கறது யார்னு ஹேண்டில் பண்ணிட்
வா.."

வெளியே நின்றிருந்தது ஒரு டாக்ஸி.

டாக்ஸியின் பின்பக்கக் கதவைத்திறந்
கொண்டு ஒரு நரைத்த தலை எட்டி
பார்த்தது.

"அம்மா மைத்ரேயி.. நான்தான்ம
வையாபுரி.."

வையாபுரி தினேஷின் தாய்மாமன். இரண்டு
மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இப்படி திடீ
விஸிட் அடிப்பார்.

வையாபுரிக்குப் பின்னே அவர் மனைவி
ஜெயம்மாவும் இறங்க டிரைவர் டிக்கியைத்



திறந்து ஒரு பெரிய சூட்கேஸ், மற்றும் பேக்குகளை எடுத்துக் கீழே வைத்துவிட்டு நிற்க, வையாபுரி பணத்தைக் கொடுத்ததும் கிளப்பிக் கொண்டு போனான்.

மைத்ரேயி வலுக்கட்டாயமாக ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டாள்.

"நாளைக்கு இங்கே ஒரு கல்யாணம். அதான் உடனே புறப்பட்டு வந்துட்டேன். அதுசரி. நீ ஏம்மா கேட்டைத் திறக்கறே.. வாட்ச்மேன் எங்கே..?"

"வாட்ச்மேன் இன்னிக்கு லீவு.."

போர்டிகோ படியேறும்போதே ஜெயம்மா கேட்டாள்.

"தினேஷ் தூங்கிட்டானா?"

"அவர் அர்ஜென்ட்டா டெல்லிவரைக்கும் போயிருக்கார்.."

அவர்கள் இருவரையும் மாடியறையில் தங்க வைத்துவிட்டுக் கீழே வந்தாள். ஸ்டோர் ரூமுக்குப் பக்கத்தில் நின்று குரல் கொடுத்தாள்.

"பாஸ்கர்.."

குரல் இல்லை. உள்ளே போய்ப் பார்க்க அறையே வெறுமையாக இருந்தது. பின் கதவைத் திறந்து தோட்டத்தில் பார்த்தாள். இருட்டில் வாழை மரங்களுக்கு மத்தியில் தலையைப் பிடித்தபடி பாஸ்கர் உட்கார்ந் திருப்பது தெரிந்தது.

"பா..பாஸ்கர்.. எ..என்னாச்சு..?"

"நீ வெளியே போன நேரம் என்னை யாரோ பின்னாடி பார்க்கற மாதிரி இருந்துச்சு.. யார்னு பார்க்கறதுக்காக வெளியே வந்தேன். அந்த நேரத்துல என்னை இரும்பு பைப்பால அடிச்சிட்டு அந்த உருவம் ஓடிடுச்சு.."

"ச..சரி... வாங்க. பர்ஸ்ட் எய்ட் பண்ணிக்கலாம்.."

"காரில் வந்தது யாரு மைத்ரேயி...?"

"என் கணவரோட மாமாவும் அத்தையும் ஒரு கல்யாணத்துக்காக வந்திருக்காங்க."

"மைத்ரேயி.. என்னென்னவோ நடக்குது ஒருத்தி போன்ல மிரட்றா.. யாரோ ஒருத்தன் வந்து அடிச்சிட்டுப் போறான்.."

"ஒருவேளை திருடனாக இருப்பானோ..?"

இருவரும் உள்ளே வந்தார்கள். படுக்கை யறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்கள். அலமாரியில் இருந்த ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்து அவனுக்கு மருத்துவ முறைப்படி கட்டுப் போட்டாள் மைத்ரேயி.

டெட்டாலும், டிஞ்சர் அயோடினும் எரிய வலியில் முனகினான் பாஸ்கர்.

"மைத்ரேயி. இதுக்கு மேலயும் என்னால பொறுமையா இருக்க முடியாது. அந்த ஆவடி பொண்ணு யார்னு கண்டுபிடிக்கணும்.."

அறைக்கு வெளியே நடைச்சத்தம் கேட்டது.

தொடர்ந்து கதவு தட்டப்படும் சத்தம்.

"டொக்.. டொக்.."



# 10

மைத்ரேயி திடுக்கிட்டுப் போய் பாஸ்கரைப் பார்த்தாள். அவன் மிரட்சியோடு குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டான்.

"யாரு மைத்ரேயி..?"

"அநேகமா வையாபுரி மாமாவாய் இருக்கலாம்.."

பாஸ்கரை மறைத்துவிட்டு கதவைத்திறக்க ஜெயம்மாள் நின்றிருந்தாள்.

"என்ன மைத்ரேயி.. தூங்கிட்டியா? மாமாவுக்கு ஒரே தலைவலி. ஒரு மாத்திரை போட்டாதான் அவரால தூங்க முடியும்."

"தர்றேன்" என்று சொன்னவள் அலமாரியைத் திறந்து எடுத்துக் கொடுத்தாள். ஜெயம்மா புன்னகையோடு போக மைத்ரேயி மறுபடியும் கதவைச் சாத்தினாள்.

பாஸ்கர் கட்டிலுக்கு அடியிலிருந்து வெளிப் பட்டான்.

"நான் கிளம்பறேன் மைத்ரேயி. இனியும் இங்கே இருக்கறது சரியில்லை.. அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்கற வரைக்கும் எனக்கு நிம்மதி கிடையாது.."

"நாளைக்குக் கண்டுபிடிச்சிடலாம். கவலைப்படாதீங்க.."

"வரட்டுமா மைத்ரேயி..."

* * * * *

மறுநாள் காலை 10 மணி. தன் அலுவலகத்திற்குள் நுழைந்தாள் மைத்ரேயி. நேராக எம்.டி. அறைக்குள் போய் மேசை மேல் இருந்த இன்டர்காமை உசுப்பினாள்.

"குட்மார்னிங் மேடம்.."

"நம்ம கம்பெனில வேலை பார்க்கற எல்லாரோட பயோடேட்டாவையும் உடனே கொண்டாங்க.."

பத்தே நிமிடத்தில் ப்ளாப்பியோடு வந்தார் ஏ.ஓ.

அவர் போனதும் கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து ப்ளாப்பியைக் கொடுத்தாள்.

கம்ப்யூட்டர் திரை செயல்பட ஆரம்பித்தது. மைத்ரேயி ஒரு பட்டனைத்தட்டி கம்பெனியில் வேலை பார்க்கும் எல்லா பெண் ஊழியர்களின் தற்போதைய முகவரியைக் கேட்டாள்.

அது அகர வரிசைப்படி ஆரம்பித்தது.

அலமேலு, அருணா, அகல்யா, அனிதா, அமுதா... பாமா.. சித்ரா..

மைத்ரேயி பார்வையை உன்னிப்பாக்கிக் கொண்டு ஒவ்வொருவரின் முகவரிகளையும் மனசுக்குள் வாங்கினாள்.

எந்த முகவரியில் ஆவடி வருகிறது?

கம்ப்யூட்டர் திரையில் பெயர்கள் வரிசையாய் மேலேறிக் கொண்டிருந்தது. வெஸ்ட் மாம்பலம், தி.நகர், அடையார், வில்லிவாக்கம், கிண்டி.. ஆவடியைத் தவிர அத்தனையும் வந்தது.



சுத்தமாய் சுமார் நாற்பது நிமிடங்கள்.

பெண் ஊழியர்களின் முகவரியைக் கொடுத்துவிட்டு அடுத்த கட்டளைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தது கம்ப்யூட்டர்.

'எந்தப் பெண்ணும் ஆவடியில் இல்லையே..'

குழப்பமாய் இருக்கிற நெற்றியைத் தேய்த்துக் கொண்டு மனதில் நேற்றைய இரவில் பாஸ்கரைத் தாக்கிய நபரின் நினைவு வந்தது.

ஆண் ஊழியர்களின் முகவரிப் பட்டியலையும் பார்த்துவிடலாம் என நினைத்து அதற்குரிய பட்டனைத் தட்டினாள்.

அன்பழகன், அருணாசலம், ஆறுமுகம்... எனத்தொடங்கி ஒவ்வொரு முகவரியையும் காட்டியது. பட்டாபி என்ற பெயர் வந்ததும் ஆவடி முகவரியைக் காட்டியது.

எம்.பட்டாபி, வெல்டர், 67, ஏரிக்கரை சாலை, மகாராணி நகர், ஆவடி, சென்னை.

மைத்ரேயி ஒரு வெள்ளைத்தாளை எடுத்து அந்த முகவரியைக் குறித்துக் கொண்டாள். சுறுசுறுப்பானாள். அந்த பயோடேட்டாவைப் பிரிண்ட் எடுத்தாள்.

பெயர் : எம்.பட்டாபி

வயது : 27

கல்வி : +2, டிப்ளமா இன் வெல்டிங்

இதர திறமை : கதை எழுதுவது, நாடக நடிப்பு.

நடத்தை : திருப்திகரம்

கம்ப்யூட்டர் தகவல்களை மூளைக்குக் கொடுத்துக் கொண்டே யோசிப்பில் வீழ்ந்தாள்.

டெலிபோனில் மிரட்டிக் கொண்டிருப்பவள் ஒரு பெண். ஆனால் ஆவடியில் இருப்பவன் ஆண்.

ஒருவேளை..! டெலிபோன் பெண்ணுக்கும் பட்டாபிக்கும் தொடர்பு இருக்கலாம். இரண்டு பேரும் பேசி வைத்துக் கொண்டு என்னை ஆளுக்கொரு பக்கம் மிரட்டி பிளாக்மெயில் பண்ணிக் கொண்டிருக்கலாம்.

கம்ப்யூட்டரை அணைத்துவிட்டு தனது பிரைவஸி டெலிபோனைத் தொட்டு ரிசீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப் பட்டது.

"பாஸ்கர்.. நான் மைத்ரேயி.."

"ஏய்.. உன்னோட போனுக்காகத்தான் காத்துட்டிருக்கேன். அந்த ஆவடி பட்சி கிடைச்சுதா..?"

"கிடைச்சது.. பெண்ணல்ல ஆண்.."

"பேரு.."

"பட்டாபி.. எங்க கம்பெனில வெல்டர்."

"சரிசரி.. நீ எதையும் கண்டுக்காதே. இந்த விஷயத்தை யார்கிட்டயும் காட்டிக்காதே. என்கிட்ட விட்டுடு. அவன் எப்படின்னு நான் பாத்துக்கறேன்.."



# 11

பாஸ்கர் அந்த முற்பகல் வேளையில் தன்னுடைய பைக்கை அந்த டிடெக்டிவ் ஏஜென்சிக்கு முன்னால் நிறுத்திவிட்டு மாடிப்படியேறினான்.

ஹெல்ப்பிங் ஹேண்ட் என்ற பெயர்ப் பலகை சுவரில் அப்பியிருக்க அதையொட்டி திறந்திருந்தது.

பாஸ்கர் உள்ளே நுழைந்தான்.

டைப்ரைட்டிங் மிஷினைத் தட்டிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். தற்காலிகமாய் தட்டுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்தாள். போட்ட மேக்கப் அவளை அழகி என்று சொல்ல வைத்தது. உதடுகளில் தீற்றியிருந்த லிப்ஸ்டிக் தேயாமல் ஜாக்கிரதையாய்ப் பேசினாள்.

"யார் சார் வேணும்..?"

"இங்கே தாமுன்னு.."

"பக்கத்து ரூம்ல இருக்கார் போங்க.."

போனான்.

டெலிபோன் பேசிக் கொண்டிருந்த அந்த இருபத்தைந்து வயது தாமு பாஸ்கரைப் பார்த்ததும் மலர்ந்தான். டெலிபோனை கட் செய்துவிட்டு "வாடா மச்சி.." என்றான். நாற்காலியைக் காட்டி "உட்கார்.." என்றான்.

"உட்கார நேரமில்லை.. ஒரு நிமிஷம்

வெளியே வர்றியா..?"

"என்னடா என்ன விஷயம்?"

"நிறைய இருக்கு.."

"ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணு.."

"எதுக்கு..?"

"என்னோட பாஸ் இன்னும் ஆபிஸ் வரலை.. அவர் இல்லாத சமயங்கள்ல நான் ஆபிஸ்ல இருந்தாகணும்.. ஏன்னா முக்கியமான போன்கால் ஏதாவது வரலாமில்லையா?"

"சரி வரட்டும்."

"நீ வெளியே போய் சொல்ல வேண்டியதை இங்கேயே சொல்லு.. யாரும் வரமாட்டாங்க.."

"எனக்கு உன்னோட உதவி தேவைப் படுது.."

"சொல்லு பண்ணிடுவோம்.."

"அது உன்னோட ஆபிஸ்ல இருக்கறவங்க யாருக்கும் தெரியக்கூடாது. நீ என்னோட ஸ்கூல் மேட் என்கிற ஒரே காரணத்துக் காகத்தான் வந்தேன்.."

தாமு சிரித்தான்.

"விஷயம் வெளியே யார்க்கும் தெரிஞ்சிடக் கூடாதுங்கறதுக்காகத்தானே டிடெக்சிவ் ஏஜென்சியை வெச்சு நடத்திட்டு வர்றோம். உன்னோட பிரச்னை என்ன? அதை மொதல்ல சொல்லு.."

பாஸ்கர் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னான்.



"ஒரு ஆளைப் பத்தின விஷயங்களை ரகசியமாய் சேகரிச்சுக் கொடுக்கணும்.."

"இவ்வளவுதானே.. இதுக்கா இவ்வளவு பீடிகை. இந்த மாதிரியான வேலைகள் பண்றதுக்காகத்தானே நாங்க இந்த ஏஜென்சியையே வெச்சிருக்கோம். ஆள் யார்னு சொல்லு. இருபத்து நாலு மணி நேரத்துக்குள்ள அத்தனை தகவல்களும் என் கையில் இருக்கும்.."

"தாமு.. இது என்னோட பர்சனல் மேட்டர். இது உன்னோட பாஸுக்கோ இல்ல வேலை பார்க்கற மத்தவங்களுக்கோ போகக் கூடாது.."

"போகாது.. ஆள் யார்னு சொல்லு.."

"பேர் பட்டாபி. வயது 27, வெல்டர். அட்ரஸ்? ஆவடில." என சொல்லிக் கொண்டே போனான். தாமு குறித்துக் கொண்டு கேட்டான்.

"இந்த பட்டாபியைத் தெரியுமா?"

"தெரியாது. பார்த்ததில்லை.."

"இவனால் உனக்கு என்ன பிரச்னை...?"

"சாரி. அது உனக்கு வேண்டாத விஷயம்."

"இட்ஸ் ஓ.கே. நாளைக்கு இதே நேரம் வா.. முடியலைன்னா போன் பண்ணு. அவன் ஜாதகத்தையே தர்றேன்.."

"இல்ல. நான் நேர்லயே வர்றேன்.."

பாஸ்கர் வெளியேறியதும் தாமு, பட்டாபி பற்றிய விபரங்களை மறுபடியும் படிக்க ஆரம்பித்தான்.

*****

மறுநாள் மதியம் 2 மணி.

பகல் உணவை முடித்துக் கொண்டு படுக்கையறைக்குள் போன மைத்ரேயியை ஹாலில் இருந்த டெலிபோன் கூப்பிட்டது.

"மைத்ரேயி.."

"சொல்லு பாஸ்கர்.."

"நம்ம ரெண்டு பேரோட நிம்மதிக் குலைவுக்கும் காரணம் அந்த பட்டாபிதான்.."

"எப்படி..?"

"டிடெக்டிவ் ஏஜென்சி மூலமா என்னோட நண்பன் கண்டுபிடிச்சான். அவனுக்கு மிமிக்ரியும் தெரியுமாம். பெண் குரல்ல பேசினதும் அவன்தானாம்.. முந்தாநாள் உன் வீட்டுக்கு வந்து என்னை அடிச்சிட்டுப் போனதும் அவனாகத்தான் இருக்கணும்.."

"இதெல்லாம் பண்ணினது அவன்தான்னு எப்படிக் கண்டுபிடிக்கறது பாஸ்கர்.."

"சந்தர்ப்பம் பார்த்து ஒருநாளைக்கு அவனை மடக்கி நாலு உதை விட்டா உண்மை வெளியே தன்னால வந்துரும்.."

"பாஸ்கர். பார்த்து.. பின்னாடி ஏதாச்சும் பிரச்னை வந்துடப் போகுது..."

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். பிரச்னையை சால்வ் பண்ணிட்டு உனக்கு போன் பண்றேன்.."

"ஓ.கே. பாஸ்கி.."



போனை வைத்துவிட்டுத் திரும்ப மறுபடியும் ஒலித்தது.

மறுமுனையில் பெண்குரல் சிரித்தது.

"என்ன மைத்ரேயி பேச்சையே காணோம்.."

"இப்ப உனக்கு என்ன வேணும்..?"

"நீ உன் புருஷனுக்கு துரோகம் பண்றதை நிறுத்தணும்.. இல்லேன்னா உனக்கான தண்டனை காத்துட்டிருக்கு.."

## 12

பாஸ்கர் அந்த முன்னிரவில் மோட்டார் பைக்கை ஒரு மரத்துக்குக் கீழே நிறுத்திவிட்டு ஆள் சந்தடியற்ற தெருவில் நடந்து பட்டாபியின் வீட்டுக்கு முன்பாய் வந்து நின்றான்.

படிகள் ஏறி சாத்தியிருந்த கதவை மெல்லத் தட்டினான்.

"டொக்.. டொக்.."

சிறிது நேரத்துக்குப் பின் கதவை மெல்லத் திறந்ததும், லுங்கியும் பனியனும் அணிந்து வந்த இளைஞன் மெல்லிய இருட்டில் தெரிந்தான். பாஸ்கர் கேட்டான்.

"பட்டாபி..?"

"நான்தான்.."

"உன்கிட்டக் கொஞ்சம் பேசணும்..?"

"நீங்கள் யார்? என்ன விஷயம்?"

"உள்ளே போய்ப் பேசலாமா?"

சில விநாடிகள் நிதானித்து பின் தயக்கமாய் பட்டாபி உள்ளே போக, பாஸ்கர் அவனைத் தொடர்ந்தான்.

சிறிய வீடு. இரண்டே அறைகள்.

பட்டாபி நாற்காலியைக் காட்ட, உட்கார்ந்தான்.

"இப்ப சொல்லுங்க நீங்க யாரு..?"

பாஸ்கர் மெல்ல சிரித்தான்.

"என்ன சிரிக்கறீங்க..?"

"நிஜமாவே என்னைத் தெரியாதா?"

"இல்லை.."

"இதோ பார் பட்டாபி. இனியும் நீ உன்னை மறைச்சுப் பேச முடியாது. மைத்ரேயிக்குப் போன் பண்ணிப் பேசறது நீதானே..?"

"யாரு.. ஒனரோட ஒய்ப்பா...? நான் பேசலை..."

"பொய் சொல்லாதே.. நீ லேடிஸ் வாய்ஸ்ல பேசறது எங்களுக்குத் தெரிஞ்சு போச்சு.. நீ உண்மையைச் சொல்லலைன்னா..?"

பிஸ்டலை எடுத்து அவன் நெற்றியில் வைத்தான்.

பட்டாபி பாஸ்கரின் கையில் இருந்த ரிவால்வரையே பயத்துடன் பார்த்தான்.

"சொல்லுடா.."

"அ...ஆமா...."



"எதுக்கு உனக்கு இந்த வீண் வேலை...?"

"மனசு கேட்கலை.. முதலாளி மேல இருக்கற விசுவாசத்துக்காகத்தான் இப்படி செஞ்சேன்.."

"அப்படின்னா முந்தா நாள் என்னை அடிச்சதும் நீதானே..?"

"அ··அ··ஆ...மா.."

"இதுக்கு மேலயும் உன்னை உயிரோட விட்டு வெச்சிருந்தா என்னோட வாழ்க்கையே போயிரும்.."

பாஸ்கர் சொல்லிக் கொண்டே ஸ்டிக்கரைச் சுண்ட முற்பட.. பட்டாபி சட்டென்று சுதாரித்து பக்கத்தில் இருந்த நாற்காலியை எடுத்து பாஸ்கரின் முகத்தில் வீசிவிட்டு பின்பக்கக் கதவைத் திறந்து கொண்டு ஓட ஆரம்பித்தான்.

பாஸ்கரும் துப்பாக்கியோடு அவனை மூச்சிரைத்துக் கொண்டு துரத்த ஆரம்பித்தான்.

*****

ஆவடியின் புறநகர்ப்பகுதி.

சுமார் பத்தடி இடைவெளியில் ஓடினார்கள். ஓடினார்கள். ஓடிக் கொண்டே இருந்தார்கள்.

பட்டாபி யோசித்தபடி மூச்சை இழுத்துப் பிடித்தபடி ஓடிக் கொண்டிருந்தான். இரண்டு கெண்டைக் கால்களும் ஜிவ்வென்று இழுத்துப் பிடித்தன. ஆனாலும் உயிராசையில் ஓடினான்.

'இன்னும் ஐந்து நிமிடங்கள் ஓடினால் போலீஸ் ஸ்டேஷனைத் தொட்டு விடலாம்..'

பட்டாபி ஓடிக் கொண்டே பின்னால் திரும்பிப் பார்த்தான். சற்று தொலைவில் அவனை நோக்கி பாஸ்கர் விரைந்து வந்து கொண்டிருந்தான். ஏதோ ஒன்று காலை இடற தடலென்று கீழே விழுந்து பார்த்தீனியச் செடிகளுக்கு மத்தியில் மறைந்தான்.

சுமார் பத்தடி தொலைவில் ஓடி வந்து கொண்டிருந்த பாஸ்கர் நின்றான். யோசித்தான். கண்களால் துழாவினான்.

சில விநாடிகளுக்கு நிசப்தம்.

பின் அந்த சத்தம் கேட்டது.

பட்டாபி உன்னிப்பாய்க் கேட்டான். முதுகுத் தண்டு ஐஸ் வாட்டரில் முக்கி யெடுத்த மாதிரி ஜில்லிட்டுப் போயிற்று.

அந்த சத்தம்...?

தீக்குச்சி உரசப்படும் சத்தம்.

## 13

பாஸ்கர் கையிலிருந்த தீக்குச் வெளிச்சத்தை பார்த்தீனியச் செடிகளுக் இடையே பாய்ச்சினான். ஒன்றும் புலப்பட வில்லை. கண்களைக் கூர்மையாக்கி கொண்டு அப்படியே மெதுவாக நடந்து வ பட்டாபி மெதுவாக ஊர்ந்தான். சட்டென் பட்டாபியின் காலை மிதித்தான் பாஸ்க அப்போது துப்பாக்கி வெடித்தது.



ரத்தம் சூடாய்த் தெறிக்க பட்டாபி துடித்தான்.

துடிப்பு ஓயும்வரை அவனை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த பாஸ்கர் பின் உடம்பை விட்டான்.

பட்டாபியின் உடம்பில் இப்போது சலனமில்லை.

பாஸ்கர் எழுந்தான்.

கையில் படிந்திருந்த ரத்தத்தை பட்டாபியின் சட்டையிலேயே துடைத்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

அந்த பொட்டல் வெளியில் யாரும் பார்வைக்குத் தட்டுப் படவில்லை. பட்டாபியின் உடம்பைக் கால்களால் புதருக்குள் தள்ளி விட்டுவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

* * * * *

தூக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த மைத்ரேயி டெலிபோன் கணைக்கும் சத்தம் கேட்டு எழுந்து ரிசீவரை எடுத்தாள்.

"மைத்ரேயி.. நான்தான் பாஸ்கர்.."

"சொல்லு பாஸ்கர்.. உனக்காகத்தான் காத்துட்டிருக்கேன்.. போன காரியம் என்னாச்சு..?"

"முடிஞ்சது.."

"புரியலை..."

"அந்த பட்டாபி இப்ப உயிரோட இல்லை.."

"............"

"என்ன மைத்ரேயி பேச்சையே காணோம்..?"

"நீ அவசரப்பட்டுட்டியோன்னு எனக்குத் தோணுது."

"இல்ல மைத்ரேயி.. அவன் சரிப்பட்டு வர மாட்டான். அதனாலதான் முடிச்சேன்.."

"இருந்தாலும்.."

"இத பார் மைத்ரேயி.. ஆளை முடிச்சாச்சு. அவனோட சம்சாரமும், அம்மாவும் செகண்ட் ஷோ சினிமாவுக்குப் போயிருக்காங்க. ஒரு மணிக்கு வந்திருவாங்க.. அதுக்குள்ள பாடிய டிஸ்போஸ் பண்ணணும்.. அதனால நீ உடனே உன்னோட காரை எடுத்துட்டு வா.."

"எனக்குப் பயமா இருக்கு் பாஸ்கி.."

"நீ நேர்ல வா.. பேசிக்கலாம்.."

*****

ஆவடி பஸ் டெர்மினல் அருகே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு காத்திருந்தான் பாஸ்கர்.

நேரம் 11.30 மணி.

அந்த இரவு நேரத்தில் பேருந்துகள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. அரை மணி நேரக் காத்திருப்புக்குப் பின் கார் வந்து கதவைத் திறந்தாள் மைத்ரேயி. ஓடிப் போய் ஏறினான். கார் வேகமெடுத்தது.

"பட்டாபியை பேசி சரிகட்டலாம்னு



நினைச்சேன். அதுக்குள்ள அவனை முடிச்சிட்டியே பாஸ்கர்.."

"அவன் அதுக்கெல்லாம் மசிய மாட்டான்."

ரோடு இரண்டு பக்கமும் கிளை விட, கேட்டாள்.

"எந்தப் பக்கம்..?"

"ரைட்..."

கார் பறந்தது.

"ம். நிறுத்து.. இந்த இடம்தான்.."

"பாடி எங்க இருக்கு..?"

"கொஞ்ச தூரம் நடக்கணும்.. கார் அங்க போனா சேத்துல மாட்டிக்கும்.."

இருவரும் நடந்தார்கள். காற்று அவர்களை சிலுசிலுவென்று அலம்பியது.

"எந்தப் பக்கம் போகணும்..?"

"இப்படி வா.." பாஸ்கர் அந்த இருட்டில் பார்த்தீனியச் செடிகளை மிதித்துக் கொண்டு முன்னால் நடக்க, மைத்ரேயி பின் தொடர்ந்தாள்.

## 14

**வா**னத்தில் இருந்த நட்சத்திர வெளிச்சம் பொட்டல் வெளியில் கொட்டியிருக்க இருவரும் நடந்தார்கள்.

பாஸ்கர் நின்றான்.

"மைத்ரேயி.. இந்த இடம்தான்.." சொல்லி

விட்டு குனிந்து பட்டாபியின் இரண்டு கால்களையும் பிடித்துத் தூக்கினான்.

"நீ தலைமாட்டப் பிடி. நான் காலைப் பிடிக்கறேன். இவன ஈஸியாக் கொண்டு போயிடலாம்.."

கனத்தது.

சிறிது தூரம் தூக்கிக் கொண்டு நடப்பதற்குள் மைத்ரேயிக்கு மூச்சிரைத்தது.

"என்னால முடியல பாஸ்கர்.."

"இன்னும் கொஞ்ச தூரம்தான்.."

காரைத் தொட்டார்கள். பட்டாபியை டிக்கிக்குள் திணித்துக் கொண்டு காரில் ஏறிப் பறந்தார்கள்.

"பாஸ்.. எப்படி பாடியை டிஸ்போஸ் பண்றது?"

"இப்ப நேரா முட்டுக்காடு போறோம்.. அங்க நிறைய பாழடைஞ்ச கிணறுகள் நிறைய இருக்கு.. எதுக்குள்ளயாவது போட்டுட்டாப் போதும்..."

அப்போது ரோட்டில் சிலர் காரை மறித்துக் கை காட்டினார்கள். கார் நிற்க அருகில் வந்தார்கள்.

"அம்மா என்னோட ஒய்ப் விஷம் குடிச்சு உயிர்க்கு ஆபத்தான நிலமையில இருக்கா.. நாங்க வந்த ஆட்டோ ரிப்பேர் ஆயிடுச்சு.. எங்கள உங்க கார்ல ஜி.ஹெச்சுக்குக் கொண்டு போய் விடுங்கம்மா.. புண்ணியமாப் போகும்.."

அவன் சொல்லி முடித்ததும் பதிலுக்குக்



காத்திராமல் ஒரு அம்மாவும் அவனும் சேர்ந்து ஒரு பெண்ணை ஏற்றினார்கள். ஆட்டோ டிரைவரும் சேர்ந்து கொண்டார்.

மைத்ரேயி பாஸ்கரை குழப்பமாய்ப் பார்த்துக் கொண்டே காரை விரட்டினாள்.

கார் ஜி.ஹெச் வாசலில் நிற்கும்போது மணி சரியாக 12.15.

எமர்ஜென்சி வார்டு வெறிச்சோடிப் போய்க் கிடக்க இளைஞன் காரினின்றும் இறங்கி உள்ளே ஓடினான்.

பாஸ்கரும், மைத்ரேயியும் திகிலுடன் ஒருவரையொருவர் கலக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நல்லா மாட்டிகிட்டோம்.."

இவர்கள் காத்திருக்க உள்ளே போன இளைஞன் வரவேயில்லை.

## 15

பாஸ்கரும் மைத்ரேயியும் கலக்கமாய் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"பாஸ்கர்.."

"ம்.."

"வசமா வந்து மாட்டிகிட்டோம். ஸ்ட்ரெட்ச்சர் கொண்டு வரப் போன ஆளை இன்னும் காணோமே.."

"நான் உள்ளே போய்ப் பார்த்துட்டு வந்துடட்டுமா..?"

"வேணாம்.. பார்க்கலாம்.."

மேலும் சில நிமிஷங்கள் கழிந்தபோது ஸ்ட்ரெட்ச்சரைத் தள்ளிக் கொண்டே இரண்டு ஆர்டலிகள் வர பின்னால் அந்த இளைஞன் தவிப்போடு வந்து கொண்டிருந்தான்.

பாஸ்கர் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

"வந்துட்டான்.."

"பாஸ்கர். அவனுக்குப் பின்னாடி பாருங்க.."

ஒரு போலீஸ் கான்ஸ்டபிள்.

"விஷம் குடிச்சது யாரய்யா..?"

"என் பொண்டாட்டி சார்.."

"எதுக்காக விஷம் குடிச்சா..? வரதட்சணை கேட்டியா..?"

"எதுக்காக் குடிச்சான்னே தெரியலை சார்.."

"என்ன குடிச்சா..?"

"டிக் 20 சார்.."

காரை நெருங்கினார்கள். அந்தப் பெண்ணை ஸ்ட்ரெட்ச்சருக்கு மாற்றினார்கள். கான்ஸ்டபிள் பாஸ்கரை நெருங்கினார்.

"ஆமா.. நீங்க யாரு..? ஹஸ்பெண்ட் ஒய்ப்பா..?"

"ஆமா.."

"இந்நேரத்துக்கு எங்க போறீங்க..?"

"நாங்க அர்ஜெண்ட்டா போறோம்.. சினிமாவுக்குப் போனோம். புடிக்கலை..



அதனால வீட்டுக்குப் போறோம்.."

"சரிசரி.. கார் நெம்பர், அட்ரஸைக் கொடுத்துட்டுப் போங்க.. நாளைக்கு ஏதாச்சும் பிரச்னைன்னா விசாரிக்க வேண்டியதா இருக்கும்.."

* * * * *

கார் ஹாஸ்பிடலை விட்டு வெளியே வந்து போக்குவரத்து இறந்துபோன சாலையில் வேகம் எடுத்தது.

"பாஸ்கர். வேண்டாத விவகாரம் ஒண்ணுல மாட்டிகிட்டோம்.."

"பயப்படாதே மைத்ரேயி.. அது தற்கொலை விவகாரம்தான்."

"இருந்தாலும் பாஸ்கர் இது நமக்குத் தேவையில்லாத பிரச்னைதானே. அதுவும் என் கணவர் இருக்கும்போது வீட்டுக்கு விசாரணைன்னு வந்தா நான்தானே மாட்டிப்பேன்.."

"அத பிறகு பார்த்துக்குவோம் மைத்ரேயி.. இப்ப பட்டாபியை டிஸ்போஸ் பண்றதுதான் நமக்கு முக்கியம்.."

"எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு பாஸ்கர்.."

"அப்படின்னா ஒண்ணு பண்ணலாம். நேரா உன் வீட்டுக்கு விடு.. நீ வீட்ல ரெஸ்ட் எடு.. நான் இத டிஸ்போஸ் பண்ணிட்டு ஒரு ரெண்டு மணி நேரத்துல வந்துடறேன்.."

"சீக்கிரமா வந்திடு பாஸ்கர். வையாபுரி மாமா பார்க்காம இருக்கணும்.."

# 16

பாஸ்கர் காரை விரட்டிக் கொண்டு போக மைத்ரேயி வீட்டு காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

போர்டிகோ பரப்பு சோகையான ட்யூப்லைட் வெளிச்சத்தோடு தெரிந்தது.

உடம்பு பூராவும் அடித்துப் போட்ட மாதிரியான வலி. மனசுக்குள் அதைவிடப் பெரிய பாரம்.

'பாஸ்கர் பட்டாபியின் உடம்பை கரெக்ட்டாக டிஸ்போஸ் பண்ணிடுவானா..?'

'யாராவது பார்த்துவிட்டால் எல்லாமே கெட்டுவிடும். பாஸ்கர் என்னை போலீசில் காட்டிக் கொடுக்காவிட்டாலும் கார் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுமே..'

திக்திக் என்று ஓயாமல் அடித்துக் கொள்கிற இதயத்தோடு கண்களை மூடிக் கொண்டு அப்படியே படுத்துக் கிடந்தாள் மைத்ரேயி.

அவளையும் அறியாமல் கண்ணயர்ந்து விட -

வாசலில் காலிங் பெல் 'ர்ர்ர்'ரென்று வீறியது. திடுக்கிட்டுப் போய் எழுந்து உட்கார்ந்தாள் மைத்ரேயி.

'வந்திருப்பது யார்? பாஸ்கரா? இல்லை வையாபுரி மாமாவா..?'

வேகவேகமாய் எழுந்து போய் தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்தாள் மைத்ரேயி.



வெளியே வையாபுரி மாமாவும், அத்தையும் நின்றிருந்தார்கள்.

"என்னம்மா நீ இன்னும் தூங்கலையா..? பெல் அடிச்சதுமே வந்து திறந்துட்டே...?"

"அது.. வந்து.. தூக்கம் வராம படிச்சிட்டு இருந்தேன்.."

"நல்ல பொண்ணும்மா நீ.. வேளா வேளைக்கு சாப்பிட்டு நேரத்துக்குப் படுக்க வேண்டாமா?"

மைத்ரேயி கதவைத் தாழிட்டாள். அவர்கள் இருவரும் மாடிப்படியேறிப் போனார்கள்.

மைத்ரேயி தன்னறைக்குப் போய் யோசித்தாள்.

'பாஸ்கர் பாடியை டிஸ்போஸ் பண்ணிட்டு எத்தனை மணிக்குத் திரும்புவான்னு தெரியலையே..?'

கண்களை மூடினாள். பயத்தில் வயிறு பிசைந்தது.

அப்போது டெலிபோன் ஒலிக்க.. அச்சத்தில் எழுந்தாள்.

'இந்நேரத்துக்கு யார்..? ஒருவேளை பாஸ்கராக இருக்குமோ?'

எடுத்துப் பேசினாள். தினேஷ்.

"என்னங்க திடீர்னு இந்நேரத்துக்கு.."

"வேலை முடிஞ்சு நான் வந்துட்டேன். மீனம்பாக்கம் ஏர்போர்ட்ல இருக்கேன்..."

"என்னது சென்னை வந்துட்டீங்களா..?"

"ஆமா.. பதினொரு மணி ப்ளைட் கிடைச்சது வந்துட்டேன். இன்னும் ஒருமணி நேரத்துல உன் முன்னாடி நிப்பேன்.."

"வா... வா...ங்க.."

தினேஷ் மறுமுனையில் ரிசீவரை வைத்துவிட மைத்ரேயி உடம்பு பூராவும் நொறுங்கிப் போன உணர்வில் அப்படியே தளர்ந்துபோய் உட்கார்ந்தாள்.

'கடவுளே.. இது என்ன புது சிக்கல். இவர் இப்படி திடீர்னு வந்துட்டாரே.. நான் என்ன பண்ணுவேன்..'

நேரம் கடந்தது.

மைத்ரேயி பொறுமையிழந்துபோய் வாசல் கதவைத் திறந்து கொண்டு போர்டிகோவுக்கு வந்து நின்று தெருவைப் பார்த்தாள்.

தெருவில் ஏதோ வெளிச்சம்.

பாஸ்கராக இருக்குமோ என்ற உற்சாகத்தில் உற்றுப் பார்த்தாள். ஒரு ஸ்கூட்டர் கடந்து போயிற்று.

நாய் குரைத்த ஒலியைத் தவிர வேறொன்னும் இல்லாத மயான அமைதி நிலவியது. சற்று நேரம் மனவெளியெங்கும் திகில் நிறைந்திருக்க பயத்துடனே நேரத்தைக் கடத்தினாள். கொஞ்ச நேரம் கழித்து ஒரு கார் வருவதுபோலத் தெரிந்தது.

ஹார்ன் சத்தம் எழுந்தது.

மைத்ரேயியின் இதயத்துடிப்பு உச்சக் கட்டத்துக்குப் போனது.



# 17

மைத்ரேயி தாறுமாறான இதயத் துடிப்போடு காம்பவுண்ட் கேட்டுக்கு வெளியே பார்வையைக் கொண்டு போக, நின்றிருந்த கார் ஹார்ன் கொடுத்தது.

'பாஸ்கரா..? தினேஷா..?'

அவளுடைய கார்தான். டிரைவிங் சீட்டில் பாஸ்கர் தெரிந்தான்.

"போன காரியம் என்னாச்சு..?"

"முடிஞ்சது.. ஆமா.. ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கே..?"

"காரை உள்ள விட்டுட்டு நீ உடனே கிளம்பு.. என் கணவர் வந்துட்டார்."

"என்னது வந்துட்டாரா.. எங்கே..?"

"ஏர்போர்ட்ல இருந்து வந்துட்டிருக்கார்.. எதுவா இருந்தாலும் நாளைக்குப் பேசிக்கலாம். நீ கிளம்பு.."

பாஸ்கர் இருட்டுக்குள் கரைய.. காரை உள்ளே விட்டு விளக்குகளை அணைத்து விட்டு உள்ளே திரும்ப.. எதிரே வையாபுரி மாமா புன்னகையோடு நின்றிருந்தார்.

"என்னம்மா.. காரைக் கொண்டு வந்துட்டாங்க போலிருக்கு.."

"ஆ..ஆமா.. அப்புறம் தினேஷ் சென்னை வந்துட்டார். ஏர்போர்ட்ல இருந்து வந்து கிட்டிருக்கார்.."

"அப்படியா.. தினேஷ் போன் பண்ணிச் சொன்னானா..?"

"ஆமாம்.. நீங்க போய்ப் படுங்க.. நான் அவரை ரிசீவ் பண்ணிக்கறேன்.."

"இல்லம்மா.. பாவம் நீ மட்டும் தனியாகவா உட்கார்ந்திருக்கப் போறே... நானும் வெயிட் பண்றேன்.. அவன் வரட்டும்.. பேசிட்டு அப்புறமாப் போய்ப் படுக்கறேன்.."

இருவரும் சோபாவில் உட்கார்ந்தார்கள். நேரம் கடந்தது. சற்று நேரத்தில் டெலிபோன் ஒலித்தது.

'ஒருவேளை தினேஷாக இருக்குமோ?'

"ஹலோ.. இது தினேஷ் வீடா..?"

"ஆமா.. நீங்க யாரு?"

"நாங்க போலீஸ்.. நீங்க மிஸஸ்ஸா..?"

"ஆமா. என்ன விஷயம்..?"

"ஸாரி டு ஸே திஸ்.. உங்க கணவர் தினேஷ் ஏர்போர்ட்ல இருந்து வந்துட்டிருக்கும்போது... ஹி மெட் வித் அன் ஆக்சிடென்ட்.."

"ஆ... ஆக்சி... டென்ட்...?"

"எஸ். கிண்டிக்குப் பக்கத்துல லாரியோட டாக்ஸி மோதி டிரைவர் ஸ்பாட் டெட். உங்க கணவர்க்கு தலையில அடிபட்டு ஜி.ஹெச். கொண்டு போகப் பட்டிருக்கார்.."

"அ.. அவ..ரோட ... உயிர்க்கு...?"

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது.. நீங்க உடனே புறப்பட்டு வாங்க.."



"இதோ புறப்பட்டுட்டேன்..." சத்தமாய்ச் சொல்லி ரிசீவரை வைத்த மைத்ரேயிக்குள் மகிழ்ச்சி முளைவிட்டது.

'போலீஸ் சொல்வதைப் பார்த்தால் தினேஷ் பிழைக்க மாட்டார் போலிருக்கே..?'

"போன்ல யாரம்மா.. தினேஷா..?"

"இல்ல.. போலீஸ்..."

அவர் பதட்டப்பட, மைத்ரேயி போனில் வந்த விஷயத்தைச் சொல்ல, அவர் அதிர்ந்து போய் முகம் வியர்த்தார்.

* * * * *

ஜி.ஹெச்.

மைத்ரேயி, வையாபுரி, வையாபுரியின் மனைவி மூன்று பேரும் காரை விட்டிறங்கி ஹாஸ்பிடலுக்குள் நுழைய, வராந்தாவிலேயே அந்த இன்ஸ்பெக்டர் எதிர்ப்பட்டார்.

மைத்ரேயி செயற்கையான அழுகையோடு கேட்டாள்.

"ஐ'யம் மைத்ரேயி.."

"அவர் இப்போ ஐ.ஸி. யூனிட்ல இருக்கார். ட்ரீட்மென்ட் நடந்துட்டிருக்கு. டாக்டர் வெளியே வந்தாதான் கன்டிஷன் என்னன்னு தெரியும்."

"ஆக்சிடென்ட் ஆனதும் அவரோட கன்டிஷன் என்ன? எப்படி எனக்கு போன் பண்ணீங்க..?"

"அடிபட்டதும் அவர் கோமா ஸ்டேஜுக்குப்

போயிட்டார். அவரோட சூட்கேஸ்மேலயே அட்ரஸ், போன் நம்பர்லாம் இருந்தது.."

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அந்த நர்ஸ் ஓடி வந்தாள்.

## 18

ஓடி வந்த நர்ஸ் இன்ஸ்பெக்டரைப் பார்வையில் வாங்கி சட்டென்று நின்றாள்.

"என்ன சிஸ்டர்..?"

"டாக்டர்.. உங்களக் கூப்பிடறார் சார்.."

இன்ஸ்பெக்டர் மைத்ரேயியை ஏறிட்டார்.

"ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நான் டாக்டரைப் பார்த்துட்டு வந்ததும் சொல்றேன்.."

சொன்னதும் நர்ஸைப் பின்தொடர்ந்தார். வராந்தாவைக் கடந்து ஐ.ஸி. யூனிட்டுக்குப் பக்கத்தில் இருந்த டாக்டரின் அறைக்குள் நுழைந்தார்.

"ஹவ் ஈஸ் பேஷண்ட் டாக்டர்..?"

"ரொம்ப சீரியஸ். பேஷண்ட் பிழைக்கறது கஷ்டம்.. பேஷண்ட்டுக்கு வேண்டியவங்க வந்திருக்காங்களா..?"

"ம். ஒய்ப், மாமா, அத்தையெல்லாம்.."

"மிஸஸ் மைத்ரேயி.. அவங்ககிட்ட உண்மையைச் சொல்லிடுங்க.."

"டாக்டர். அந்தப் பொண்ணைப் பார்த்தால் பாவமா இருக்கு.. இப்ப எதுவும் வேண்டாம்.



கடைசியில சொல்லிக்கலாம்."

"உங்க இஷ்டம்."

டாக்டர் எழுந்து போனதும், வெளியே வந்தார் இன்ஸ்பெக்டர்.

மைத்ரேயியும், வையாபுரியும் அந்த இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்கள்.

"சார்.. அவர்க்கு...?"

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது.. ட்ரீட்மெண்ட் நடந்துட்டிருக்கு.."

"இன்ஸ்பெக்டர்.. வேற ஒரு நல்ல பிரைவேட் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போயிடலாமா..?"

"நோ.. நோ.. ட்ரீட்மெண்ட் முடியட்டும். பார்த்துக்கலாம்.. இல்லேன்னா பெரிய பெரிய டாக்டர்ஸையெல்லாம் இங்கே வரவழைச்சுப் பார்க்கலாம்.. உங்க பேமிலி டாக்டர் யாரு..?"

"ராமபத்ரன்.."

"அடையார்ல இருக்காரே அவரா..?"

"ஆமா.."

"அவர்க்கு இப்பவே போன் பண்ணிச் சொல்லிடலாம்... வரட்டும்.." மைத்ரேயியிடம் போன் நெம்பரை வாங்கிக் கொண்டு வராந்தாவின் கோடியில் இருந்த டெலிபோன் அறையை நோக்கிப் போனார்.

வெள்ளைக் கோட்டைத் தோளில் போட்டுக் கொண்டு தளர்வாய் வெளியேறிக் கொண்டிருந்த டாக்டர் ஒருவரிடம் ஓடினார்

வையாபுரி.

"டாக்டர்.. தினேஷைப் பார்க்கலாமா?"

"ம்.. போய்ப் பாருங்க.. பட் டிஸ்டார்ப் பண்ணக் கூடாது.."

"வேண்டாம் மாமா.. அவரை அந்தக் கோலத்துல பார்க்கற தைரியம் எனக்குக் கிடையாது.. நீங்களும் அத்தையும் பார்த்துட்டு வாங்க.. நான் இங்கேயே நிக்கறேன்.."

அவர்கள் கிளம்பிப் போக மைத்ரேயியின் மனசுக்குள் சந்தோஷம் கொஞ்சம் கொஞ்சமாய் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

'அவர்க்கு நேர்ந்திருக்கற இந்த விபத்து ஒரு பெரிய வரப் பிரசாதம். டாக்டர் வெச்சிருக்கற கெடுவுக்குள்ளே அவர் போய்ச் சேர்ந்துட்டா பாஸ்கருக்கு அவரைத் தீர்த்துக் கட்ற வேலை மிச்சம்..'

இன்ஸ்பெக்டர் டெலிபோன் பேசிவிட்டு வேகவேகமாய் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த மைத்ரேயி எச்சில் விழுங்கினாள்.

இன்ஸ்பெக்டர் பக்கத்தில் வந்து சொன்னார்.

"போன் பண்ணிப் பேசிட்டேன். உடனே வர்றேன்னார்.."

"இன்ஸ்பெக்டர், என் கணவரோட நிலைமை என்ன..?"

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது.. நாளைக்குக் காலைலதான் தெரியும்.. ஓ.கே. மிஸஸ் மைத்ரேயி.. நான் உடனே ஸ்டேஷனுக்குப் போகணும்.. இன்னும்



அரை மணி நேரத்துல டாக்டர் ராமபத்ரன் வந்திடுவார். அவசரம்னா எனக்குப் போன் பண்ணுங்க.."

மைத்ரேயி தலையசைக்க இன்ஸ்பெக்டர் பூட்ஸ் சத்தத்தோடு வராந்தாவில் நடந்து மறைந்தார்.

நாற்காலிக்கு வந்து சாய்ந்து உட்கார்ந்தாள். பக்கத்து அறையில் நர்ஸ்கள் இப்போது ராசா கொள்ளையடித்தாரா? இல்லையா? என்று பட்டி மன்றம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

"நாலு தலைமுறைக்கு சம்பாதிக்கறதைக் கேள்விப் பட்டிருக்கோம். ஆனா நானூறு தலைமுறைக்கு லபக்குவதை இப்பதாண்டி கேள்வியே படறோம். நினைச்சா ஹார்ட் அட்டாக்கே வருதுடி.."

பேச்சுக் கேட்டுக் கொண்டிருக்க - சற்றுத் தொலைவில் இருந்த ஜன்னலில் ஒரு முகம் திடீரென்று முளைத்து மைத்ரேயியை நோக்கிக் கையசைத்துக் கூப்பிட்டது.

திடுக்கிட்டாள்.

'யாரது..?'

உற்றுப் பார்த்தாள்.

இருட்டில் முகம் பிடிபடவில்லை. உருவம் கையை மட்டும் அசைத்துக் கொண்டே இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்து எழுந்தாள். ஜன்னலை நோக்கி மெதுவாய் நடந்தாள்.

அந்த முகம் பார்வைக்குப் பிடிபட்டது.

பாஸ்கர்.

## 19

மைத்ரேயிக்கு வியப்பில் மூச்சை அடைத்தது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னால் தெரிந்த பரிச்சயமான அந்த முகத்தை அதிர்ச்சியோடு ஏறிட்டாள்.

"பாஸ்கர்.. எந்த இந்த நேரத்துல வந்திருக்கே..?"

"கடந்த அரை மணி நேரமா உன்னைப் பார்க்கறதுக்காக இங்கேயே காத்திட்டிருக்கேன் மைத்ரேயி.."

"என்ன விஷயம்..? யாராவது பார்த்துட்டா என்னாகும்னு யோசிச்சியா?"

"உன்னோட கார்ல என்னோட பர்ஸைத் தவற விட்டுட்டேன். அதுல என்னோட போட்டோ, அட்ரஸ் எல்லாம் இருக்கு.. நாளைக்கு உன் கணவனுக்குத் தெரிஞ்சா பிரச்னை ஆயிடும்ல.."

மைத்ரேயி மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு நடந்த சம்பவங்களை விவரித்தாள். பாஸ்கரின் முகம் பிரகாசமாகியது.

"மைத்ரேயி.."

"ம்.."

"இது நமக்குக் கிடைச்சிருக்கற நல்ல சந்தர்ப்பம். இந்த நேரத்துல தினேஷை முடிச்சிட்டா நம்ம மேல சந்தேகம் வராது.. முயற்சி பண்ணு மைத்ரேயி.."



"கண்டிப்பா.. சமய சந்தர்ப்பம் பார்க்கறேன். நீ உடனே கிளம்பு.."

"அந்த பர்ஸ் விவகாரம்.."

"அத நான் பார்த்துக்கறேன்.."

"நாளைக்குக் காலைல போன் பண்றேன். தினேஷ் உயிரோட இல்லேங்கற நல்ல செய்தியை எனக்குச் சொல்லு.." பாஸ்கரின் முகம் ஜன்னலில் இருந்து அகன்று இருட்டில் மறைந்தது.

* * * * *

பாஸ்கர் ஜன்னலைவிட்டு அகன்றதும் மைத்ரேயி வராந்தாவின் கோடி வரைக்கும் பார்வையால் அலசினாள். யாரும் இல்லை. வேகநடை போட்டு காருக்கு வந்தாள். கதவைத் திறந்து தேட, கீழே பாஸ்கரின் பர்ஸ் கிடந்தது. எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டாள்.

அப்போது உள்ளே ஒரு கார் வேகமாக நுழைய கவனித்தாள். காரை நிறுத்திவிட்டு டாக்டர் ராமபத்ரன் வேகமாய் இறங்கினார். அவரை எதிர்கொண்டு தழுதழுத்தாள்.

"டா..டாக்..டர்.. அவர்க்கு இங்க இருக்கறவங்க கெடு வெச்சிட்டாங்க.. அவரை நீங்கதான் காப்பாத்தணும்.. ப..பணம் எவ்வளவு செலவானாலும்.. பரவால்ல.. உங்களத்தான் நம்பியிருக்கேன் டாக்டர்.."

"பயப்படாதேம்மா.. தினேஷ்க்கு எதுவும் ஆகாது.. இன்னும் சில டாக்டர்ஸ் வர்றாங்க.. எப்படியும் காப்பாத்திடலாம்.."

இருவரும் வராந்தாவில் மௌனமாய் நடந்து ஐ.ஸி. யூனிட்டை நெருங்கியபோது வையாபுரி மாமாவும், அத்தையும் எதிர்ப் பட்டார்கள். இரண்டு பேர்களின் கண்களிலும் நீர் அரும்பியிருந்தது.

"அவன் கிடக்கற கோலத்தை என்னால கண்கொண்டு பார்க்க முடியலைம்மா.."

உள்ளே ஏர்கன்டிஷனர் உறுமிக் கொண்டிருக்க.. தலையில் கட்டோடு படுக்க வைக்கப்பட்டிருந்தான் தினேஷ். ரத்தமும், க்ளுக்கோஸ் பாட்டிலும் உடம்புக்குள் பயணம் செய்து கொண்டிருந்தது.

தலைமாட்டில் ஒரு டாக்டரும் நர்ஸும் நின்றிருக்க, ராமபத்ரன் சார்ட்டைப் பார்த்து விட்டு டாக்டரை ஏறிட்டார்.

"தலையிலதான் அடியா..?"

"எஸ். மூளையோட செரிபெல்லம் பகுதியில ப்ளட் க்ளாட் ஆகியிருக்கு.."

"அதை ஆபரேஷன் பண்ணி எடுத்துட்டா உயிர் பிழைக்கக் கூடிய சான்ஸ் அதிகமாகுமே.."

"ஆமா.. ஆனா டாக்டர்ஸ் இன்னும் வரலையே.."

"நான் ஏற்பாடு பண்ணிட்டேன்.. இன்னும் பத்து நிமிஷத்துல வந்திடுவாங்க.. நீங்க ஆபரேஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணுங்க.."

ராமபத்ரன் கால்களில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டவர் போல பரபரப்பாக இயங்க,



மைத்ரேயி சலனமில்லாமல் படுத்துக் கிடக்கும் கணவனை உணர்ச்சியில்லாமல் பார்த்தாள்.

'அந்த சீப் டாக்டர் வருவதற்குள் இவருடைய மூச்சை நிறுத்த வேண்டும். முடியுமா?'

## 20

மைத்ரேயியின் மூளை விதவிதமாய் யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

'கணவனின் கதையை முடிக்க வேண்டு மென்றால் ஐ.ஸி. யூனிட்டுக்குள் யாரும் இருக்கக் கூடாது. இது சாத்தியமா?'

'இன்னும் கொஞ்ச நேரத்தில் சீப் டாக்டர் வந்து ஆபரேஷனை ஆரம்பித்துவிட்டால் தினேஷ் பிழைப்பது உறுதியாகி விடும்.. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டும்..'

மைத்ரேயியின் இதயம் பதைபதைத்தது.

'காப்பாற்றி விடுவார்களோ..?'

'விடக்கூடாது..'

* * * * *

சீப் டாக்டர் கோஷ் வந்ததும் வேலைகள் சுறுசுறுப்பாகின. ஸ்கேன் பண்ணிப் பார்த்தார்கள். சிகிச்சை ஆரம்பமானது. ஆபரேஷன் பண்ணும் நேரமும் நெருங்கி விட்டது.

டாக்டர் கோஷ் மைத்ரேயியை ஏறிட்டார்.

"இனி நீங்கள் அழ வேண்டியதில்லை. உங்கள் கணவரைக் காப்பாற்றி விடலாம்.."

"டா.. டாக்டர்..."

"எஸ். உங்க கணவரின் முதுகுத் தண்டு வடத்தில் ஒரு டிஸ்க் மோசமான முறையில் அடிபட்டு வீங்கியிருக்கிறது. அதனால்தான் கோமா ஸ்டேஜ். இதற்கு உடனடியாய் ட்ரீட்மென்ட் எடுத்தால் அவர் பிழைத்துக் கொள்வார்."

போலி பரவசத்தோடு கைகளைக் கும்பிட்டாள் மைத்ரேயி.

"டாக்டர். நீங்க எது செய்தாலும் சரி. அவர் உயிர் பிழைத்தே ஆக வேண்டும். எவ்வளவு செலவானாலும் சரி. நான் பார்த்துக் கொள்கிறேன்.."

"எல்லா ட்ரீட்மென்ட்டையும் செய்யற அளவுக்கு இந்த ஹாஸ்பிடலில் வசதிகள் இல்லை. அதனால இம்பாலாவுக்கு இவரை மாத்தலாம்னிருக்கேன்."

"என்ன வேணாலும் செய்யுங்க டாக்டர்.. நான் என்ன ஏற்பாடு செய்ய வேண்டும்..?"

"சுமார் 10 இலட்சம் வரைக்கும் செலவாகலாம்.. தயார் பண்ணிடுங்க.."

டாக்டர் கோஷ் சொல்லிவிட்டு மேஜை மேல் இருந்த ரிசீவரை எடுத்து இம்பாலாவுக்கு போன் செய்து பேசினார்.

மைத்ரேயி இறுகிப் போன முகத்தோடு தன்னைச் சுற்றி நிகழ்கிற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நெஞ்சக்கூடு பதற்றத்தில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

*****



விடியற்காலை ஐந்து மணி.

இம்பாலா பிரம்மாண்டமாய் நின்றிருக்க.. உள்ளே ஆபரேஷன் தியேட்டர்க்கு முன்பாய் மைத்ரேயி, வையாபுரி, ஜெயம்மாவும் நாற்காலி களில் சாய்ந்திருந்தார்கள்.

'கிடைத்த ஒரு வாய்ப்பும் நழுவிப் போய் விட்டதே.. பார்க்கலாம். இந்த ஹாஸ்பிடலில் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் கண்டிப்பாக தீர்த்துக் கட்டிவிட வேண்டியது தான்.'

பக்கத்தில் உட்கார்ந்து வையாபுரியும், அத்தையும் புலம்பித் தீர்த்தார்கள்.

"தைரியமா இரும்மா.. தினேஷுக்கு ஒண்ணும் ஆகாது.. நான் கிராமத்துல இருக்கற மாரியம்மன் கோயிலுக்கு வேண்டியிருக்கேன். அந்த ஆத்தா உன்னோட மஞ்சளையும், குங்குமத்தையும் காப்பாத்துவா.. நீயும் வேண்டிக்கோம்மா.."

ஆபரேஷன் தியேட்டர் கதவு திறந்தது.

டாக்டர் கோஷ், ராமபத்ரனோடு வெளிப் பட்டார். இருவருடைய முகங்களிலும் மிகப் பெரிய புன்னகை.

மைத்ரேயி எழுந்தாள்.

கணவன் பிழைத்துக் கொண்டது மனதுக்கு தீர்க்கமாய் புரிந்தது. டாக்டர் கோஷ் பக்கத்தில் வந்தார்.

"இட்ஸ் ஏ மிராக்கிள் எஸ்கேப். ஒரு மணி நேரம் லேட்டாக ஆபரேஷன் பண்ணி யிருந்தாலும்கூட தினேஷைக் காப்பாற்றி இருக்க முடியாது.."

வேண்டுமென்றே குரல் தழுதழுத்தாள் மைத்ரேயி.

"தேங்க் யூ.. வெரிமச் டாக்டர்.."

"நன்றியை உங்களோட ஃபேமிலி டாக்டர் ராமபத்ரனுக்குச் சொல்லுங்கள். அவர் மட்டும் என்னை சரியான நேரத்துக்கு கூப்பிடாம போயிருந்தா தினேஷ் இப்போ உயிரோடவே இருந்திருக்க மாட்டார்."

ராமபத்ரன் சிரித்தார்.

"மைத்ரேயி.. நீ நன்றி சொல்ல வேண்டியது எங்கள மாதிரி டாக்டர்களுக்கு இல்லை. அந்தக் கடவுளுக்கு. ஒரு நோயாளியைக் குணப் படுத்தக் கூடிய உண்மையான ஹீலர் டாக்டர்ஸ் இல்லை. கடவுள் தான்."

மைத்ரேயி கேட்டாள்.

"டாக்டர். நாங்க உள்ளே போய் அவரைப் பார்க்கலாமா?"

"நோ.. நோ... இன்னும் மூன்று மணி நேரத்துக்கு அவரை யாரும் பார்க்க அனுமதியில்லை. எட்டு மணிக்கு மேல்தான் தினேஷை ஐ.ஸி.யூல இருந்து சாதாரண வார்டுக்கு மாத்துவோம். அதுவரைக்கும் வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துட்டு வாங்க.."

வையாபுரி மைத்ரேயியிடம் திரும்பினார்.

"நீயும் அத்தையும் வீட்டுக்குப் போய் குளிச்சு சாப்பிட்டுட்டு வாங்க.. நான் இங்கேயே இருக்கேன். நீங்க வந்ததும் வேணா நான் போறேன்.."



மைத்ரேயி தயங்க ராமபத்ரன் சொன்னார்.

"போயிட்டு வாம்மா. அதான் மாமா இருக்காரே.."

தலையாட்டி விட்டு மைத்ரேயி அத்தை யுடன் நகர்ந்தாள். ஏமாற்றமும் ஆத்திரமும் தகிக்க, காரை விரட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தபோது நேரம் காலை 6 மணி.

போர்டிகோவில் காரை நிறுத்தி பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள்.

"நான் கொஞ்சம் தலையைச் சாய்க்கறேன். நீயும் ரெஸ்ட் எடும்மா.."

"சரிம்மா.."

'பாஸ்கரின் போன் வரட்டும். மேற்கொண்டு பேசிக்கலாம்.'

## 21

டெலிபோன் குரல் கொடுத்தபோது மணி ஆறரை. சோபாவில் சாய்ந்து கண் மூடியிருந்த மைத்ரேயி எழுந்து போய் ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ.."

"ஏய்.. நான் பாஸ்கர்.."

"பாஸ்கர் நாம நினைச்ச மாதிரி எதுவும் நடக்கலை."

"ஏன் உன் புருஷன் பிழைச்சிட்டானா?"

"ஆமா.."

"எப்படி?"

"ஹைதராபாத் டாக்டர் கோஷ் ஆபரேஷன் பண்ணிக் காப்பாத்திட்டார்.."

"சரி விடு.. இன்னும் எத்தனை நாள் உன் புருஷன் அங்கே இருப்பான்.."

"ஒரு வாரம்.. பத்து நாள்.."

"அப்ப சரியான சந்தர்ப்பம் வாய்க்கும்போது நீயோ.. நானோ அவனை முடிச்சிடலாம்.. எப்படின்னா..?"

"போன்ல வேண்டாம். மதியம் மூணு மணிக்கு மல்லிகை ஸ்டோர்க்கு வா.. பேசிக்கலாம்."

"ஓ.கே. வந்துடறேன்.."

*****

காலை 9 மணி.

ஆவடி போலீஸ் ஸ்டேஷனுக்குள் அந்த நடுத்தர வயது நபர் உள்ளே நுழைந்தும் பந்தாவாய் பேப்பர் படித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்கு முன் பவ்யமாய் நிற்கிறார்.

"வணக்கம் சார்.."

"என்னய்யா..?"

"என் பேரு நாதமுனி சார்.."

"விஷயத்தைச் சொல்லுய்யா.."

"என் வீட்டுக்கு பக்கத்துல பட்டாபின்னு ஒருத்தர் இருக்கார். நேத்து ராத்திரி 11 மணிக்கு அவர் வீட்ல ஏதோ சத்தம் கேட்டது. பிறகு கொஞ்ச நேரம் கழிச்சு ஒண்ணும் கேட்கலை.. காலைல பார்த்தா முன் கதவு பின் கதவு



எல்லாமே திறந்து கிடக்கு. ஆளையும் காணோம். அந்த வீடே அமளிதுமளியாக் கெடக்குது.."

"அந்த ஆள் கேரக்டர் எப்படி..?"

நாதமுனி சொன்னான்.

"சரிய்யா.. மத்தியானம் வரைக்கும் பார்ப்போம். ஆள் வரலைன்னா கம்ப்ளைண்ட் எழுதிக் கொடுத்திடு.. ஒருவேளை எங்காவது போயி தண்ணியப் போட்டு மட்டையாகி இருப்பானோ என்னவோ..?"

இன்ஸ்பெக்டர் அசுவரசியமாய் சொல்லி விட்டு மறுபடியும் பேப்பருக்குள் மூழ்கிப் போனார்.

*****

தினேஷ் கண் விழித்துப் பார்த்தபோது மதியம் இரண்டு மணி. முதன் முதலில் பார்வைக்குக் கிடைத்தவள் மைத்ரேயி.

"மை....த்....ரே....யி.."

"என்னங்க..." கண்களில் போலிக் கண்ணீரைச் சிதற விட்டு அவன் கைகளைப் பற்றிக் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

"உன்னெ தனியா விட்டுட்டுப் போயிடுவேனோன்னு நினைச்சு பயந்துட்டியா மைத்ரேயி.."

டாக்டர் ராமபத்ரன் தலைமாட்டில் நின்று கொண்டு குரல் கொடுத்தார்.

"தினேஷ்.. இனிமே நீங்க பயப்பட வேண்டியதில்லை. டாக்டர் கோஷ் உங்களைக்

காப்பாத்திட்டார். இன்னும் ஒரு வாரத்துல வீட்டுக்குப் போயிடலாம்.."

தினேஷ் ஏதோ பேச முயற்சிக்க.. கையமர்த்தினார் ராமபத்ரன்.

"ம். போதும். இன்னிக்கு நீங்க பேசினது. இனிமே நாளைக்குதான் நீங்க வாயைத் திறக்கணும்.. சரி.. எல்லோரும் அவரைத் தனியா விடுங்க. ரெஸ்ட் எடுக்கட்டும்.. வாங்க போகலாம்.."

அனைவரையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். மைத்ரேயி வையாபுரியை ஏறிட்டாள்.

"மாமா.. நீங்களும் அத்தையும் இங்கேயே இருங்க. நான் கம்பெனி வரைக்கும் போயிட்டு வந்துடறேன்."

"சீக்கிரமா வந்துடம்மா.."

கிளம்பினாள். காரில் வந்து ஏறி நேரம் பார்க்க அது 2.30 காட்டியது.

'மல்லிகை டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் மூன்று மணிக்கெல்லாம் சரியாக வந்து காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னானே..?"

"பாஸ்கரைப் பார்த்துவிட்டே கம்பெனிக்குப் போயிடலாம்..'

யோசித்துக் கொண்டே காரை நகர்த்தினாள்.

சரியாய்ப் பதினைந்து நிமிஷம் பயணம். ஸ்டோர் வந்தது. கண்கள் அனிச்சையாய் எட்டுத் திசையிலும் பாஸ்கரைத் தேடியது.



# 22

அந்தக் கடையில் அவ்வளவாகக் கூட்டமில்லை. சொற்பமாய் பெண்கள் தெரிந்தார்கள்.

காத்திருந்தாள்.

'இன்னும் பத்து நிமிஷத்தில் பாஸ்கர் வந்துடுவார்.. பார்த்துப் பேசிடலாம்..'

காத்திருப்பில் நேரம் கரைந்து கொண்டேயிருந்தது.

மணி மூன்றைத் தாண்டி நிமிடங்கள் நொண்டியடித்துக் கொண்டே நான்கைத் தொட்டது.

மைத்ரேயிக்கு பதட்டம் அதிகரித்தது.

'ராத்திரி அலைந்த அலைச்சலில் பாஸ்கர் அயர்ந்துபோய் தூங்கி விட்டானோ...?'

பாஸ்கர் அவளுக்குக் கொடுத்த பி.பி. டெலிபோன் எண் நினைவில் நின்றாடியது.

'போன் செய்து பார்க்கலாமா..?'

'அதுதான் சரி..'

கீழ்த்தளத்தில் இருந்த டெலிபோனை எடுத்து எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் ரிங் போய் எடுக்கப்பட்டது.

"ஹலோ.." வேறொரு ஆண் குரல் கேட்டது.

"உங்க பக்கத்து வீட்ல பாஸ்கர்னு ஒருத்தர்

இருப்பார். அவரைக் கூப்பிடறீங்களா..? கொஞ்சம் அர்ஜெண்ட்.."

மைத்ரேயி காத்திருந்தாள். நிமிஷ நேரத்துக்கு பிறகு அதே குரல் கேட்டது.

"பாஸ்கர் வீட்ல இல்லம்மா.. எங்க போனார்னு தெரியலையாம். அவரோட அப்பாதான் இருக்கார்.."

"சரி. நான் பார்த்துக்கறேன்.."

"என்ன விஷயம்னு சொன்னா கன்வே பண்ணிடறேன்மா.."

"நானே போன் பண்றேன்.."

மைத்ரேயி ரிசீவரை வைத்துவிட்டு நடந்தாள். முகம் வியர்த்துப் போயிருந்தது.

'நான் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் ஒருவேளை பாஸ்கர் ஹாஸ்பிடலுக்குப் போயிருப்பானோ..?'

'இனியும் இங்கே அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஆபிசுக்குப் போகலாம்..'

ஏமாற்றம் கப்பிய முகத்தோடு வந்து காரை எடுத்தாள்.

அலுவலகம் வந்ததும் சாய்வு நாற்காலியில் அமர்ந்து சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். ஏஸி அறையிலும் வியர்த்தது.

அவளுடைய பிரைவஸி போன் துடிக்க எடுத்துப் பேசினாள்.

"மைத்ரேயி.. நான்தான் பாஸ்கர்.."



"பாஸ்கர் எங்க போயிட்டே...?"

"ஒரு சின்ன பிராப்ளம். எங்க ஆபீஸ்ல கூப்பிட்டாங்க. என்கொய்ரி நடந்துட்டிருக்கு."

"ம்.. நான் ஆபிஸ்லதான் இருக்கேன்னு உனக்கு எப்படித் தெரியும்..?"

"வீட்டுக்குப் போன் பண்ணினேன். யாரும் எடுக்கலை. ஹாஸ்பிடலுக்குப் போன் பண்ணினேன். நீ ஆபிஸ் போயிட்டதாச் சொன்னாங்க.."

"என்கொய்ரி எப்ப முடியும்..?"

"ஆறேழு மணி ஆயிடும்.."

"அதுக்கும் மேல மீட் பண்ணலாமா?"

"எங்கே..?"

"நடேசன் பார்க் வந்திடு.."

"உன் புருஷனுக்கு எப்படி இருக்கு?"

"அவர் குணமாகிட்டார்.."

"எப்படி டிஸ்சார்ஜ்.."

"இன்னும் ஒரு வாரம் பத்து நாள் ஆகலாம்.."

"அந்த அவகாசம் நமக்குப் போதும். மத்தத நேர்ல பேசிக்குவோம்.."

"சரி.."

ரிசீவரை வைத்த விநாடி பாக்டரி மேனேஜர் உள்ளே நுழைந்தார்.

"மேடம்.."

"எஸ்."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஒரு இன்ஸ்பெக்டர் வந்துட்டுப் போனார்.."

"எதுக்...கு..?"

"பட்டாபின்னு ஒருத்தரைக் காணலியாம்.. அது சம்பந்தமா விசாரிக்க வந்திருக்கார்.."

மைத்ரேயியின் இதயம் இருண்டது. தொண்டை சட்டென்று வறண்டது.

"மேனேஜர் சார்.. இனிமே எதற்கும் போலீஸை கம்பெனிக்குள் அலவ் பண்ணாதீங்க.."

"அதெப்படி முடியும் மேடம்.. அவன் நம்ம கம்பெனி லேபராச்சே.. அதைச் சொல்ல நமக்கு உரிமையில்லை..."

மைத்ரேயி கலவரமானாள்.

## 23

**மை**த்ரேயி கம்பெனியை விட்டு ஆறரை மணிக்கே கிளம்பி காலேஜ் ரோட்டைத் தாண்டி காரை விரட்டினாள். மனசுக்குள் பயம் புகைபோல் பரவியிருந்தது.

'பட்டாபியின் மரணத்தில் போலீசாருக்கு சந்தேகம் வந்துவிட்டால் அவர்களுடைய பார்வை எல்லாத் திசைகளிலும் பாயும்..'

யோசனையிலேயே செல்ல பார்க் வந்தது. வெளியிலேயே காத்திருந்தான் பாஸ்கர்.

"உன் புருஷனுக்கு எப்படியிருக்கு..?"



"நார்மலாகிட்டார்.."

"மைத்ரேயி. உன் புருஷன் அடுத்த வாரம் ஹாஸ்பிடல்ல இருந்து வீட்டுக்குத் திரும்பப் போறதில்லை.."

"பாஸ்கர். அது அவ்வளவு சுலபமில்லை.. ஹாஸ்பிடல்ல கண்காணிப்பு தீவிரமாக இருக்கு.."

"அதுக்கு என்கிட்ட ஒரு வழி இருக்கு.."

"என்ன..?"

கரித்துண்டு மாதிரியான ஒரு வஸ்துவை பாக்கெட்டிலிருந்து எடுத்துக் காட்டினான். "இதுக்குப் பேரு சயனோ கார்பன். ஸ்லோவ் பாய்சன். இதை உன் புருஷன் இருக்கற ரூம்ல வெச்சிட்டா பத்து நிமிஷத்துல அந்த ரூம்ல யார் இருந்தாலும் க்ளோஸ்.."

"இதை டாக்டர்ஸ் கண்டுபிடிச்சிட மாட்டாங்களா..?"

"முடியாது.. இது ரத்தத்தில் கலக்காது. செயற்கையா ஹார்ட் அட்டாக்கை வரவழைச்சுக் கொன்னுடும். செக் பண்ணிப் பார்க்கற டாக்டர்ஸ்க்கு இது இயற்கையான ஹார்ட் அட்டாக் மாதிரிதான் தோணும். கண்டே பிடிக்க முடியாது.."

மைத்ரேயி அதை இன்னமும் வியப்பாய் பார்த்துக் கொண்டிருக்க.. சிரித்த பாஸ்கர் தொடர்ந்தான்.

"இதை உன் புருஷன் படுத்துட்டிருக்கற கட்டிலுக்குக் கீழே கட்டிலோட குறுக்கு

வாட்டுக் கம்பி இருக்கும்ல.."

"ஆமாம்.."

"அந்தக் கம்பில இந்த சயனோ கார்பனை ஒரு நூலால் கட்டித் தொங்க விட்டுட்டாப் போதும். அதுவும் ராத்திரி பத்து மணிக்கும் மேல இந்தக் காரியத்தைப் பண்ணிட்டா சுத்தமா யாருக்கும் தெரியாது. விடியறதுக்கு முந்தி உனக்கு புருஷன் போயிட்டதா நியூஸ் வந்திடும். சுமார் ஒரு மணி நேரத்துல இரு கரைஞ்சிடும்.. அதனால இத வெச்சு நம்மளை யாரும் கண்டுபிடிக்கவும் முடியாது.."

மைத்ரேயி மௌனமாய் இருக்க பாஸ்கர் கேட்டான்.

"என்ன யோசிக்கறே..?"

"திட்டத்தைக் கேட்கும்போது சுலபமாதான் இருக்கு.. ஆனா ப்ராக்ட்டிக்கலா முடியுமான்னு சந்தேகம் வருது. பயமா வேற இருக்கு.."

"ஒரு பயமும் வேண்டியதில்லை.. இன்னிக்கு ராத்திரி பத்து மணி வரைக்கும் நீ ஹாஸ்பிடல்ல இரு. உன் புருஷன் ரூமுக்குள்ள யாரும் இல்லாத நேரமாப் பார்த்து இதை கட்டிலுக்குக் கீழ இருக்கற குறுக்குக் கம்பியில கட்டிடு. அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ள அந்த ஹாஸ்பிடலை விட்டுப் போயிடு.."

"ரூமுக்குள்ளே நர்ஸ் இருந்தா..?"

"ஏதாவது வாங்கிட்டு வரச் சொல்லி அவளை அனுப்பிட்டு காரியத்தை முடி.."

"பாஸ்கர் எனக்குப் பயமாயிருக்கு.."



"எதுக்கு பயம்..? இதைவிட ஒரு சுலபமான வழி உன் புருஷனைத் தீர்த்துக் கட்ட கிடையாது."

"பாஸ்கர் எனக்கு வேற ஒரு யோசனை தோணுது.."

"என்ன..?"

"என்னோட கணவரைத் தீர்த்துக் கட்ற வேலையை அவர் வீடு திரும்பின பிறகு வெச்சுகிட்டா என்ன..? அவர் வீட்டுக்கு வந்துட்டா இந்த சயனோ கார்பனை உபயோகப்படுத்தறது எனக்கு சுலபமா இருக்கும்ல.."

"வீட்ல வேண்டாம்.."

"ஏன்?"

"முதல் காரணம். உன் புருஷன் உடம்பு தேற இன்னும் கரெக்ட்டா எவ்வளவு நாளாகும்னு சொல்ல முடியாது. அவ்வளவு சீக்கிரத்தில் டிஸ்சார்ஜ் பண்ண மாட்டாங்க... ரெண்டாவது காரணம்.. உன் புருஷனோட மரணத்தில் யாருக்கும் எந்த சந்தேகமும் வந்துடக் கூடாது. ஹாஸ்பிடல் மரணம் என்னிக்குமே சேப்டி... வீட்ல இருக்கும்போது இந்த சயனோ கார்பனை படுக்கையறையில வெச்சுட்டு நீ மட்டும் தனியாப் போய்ப் படுத்தா உன் புருஷனுக்கு சந்தேகம் வரும்.."

தலையசைத்தாள் மைத்ரேயி.

"நீ சொல்றது சரிதான் பாஸ்கர். நான் இதையெல்லாம் திங்க் பண்ணவேல்ல.."

"எதையுமே ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சுப் பார்க்கணும்.."

"ஆமா.. இந்த சயனோ கார்பன் உனக்கு எப்படிக் கிடைச்சது..?"

"பெஸ்ட் சைட்ஸ் கம்பெனியில வேலை பார்க்கற என் ஃப்ரெண்ட் ஒருத்தன் இது மாதிரியான சில்மிஷ வேலைகளை எல்லாம் பண்ணக் கூடியவன். வர்ற வழியில அவனைப் போய்ப் பார்த்து விஷயத்தைச் சொன்னேன். அவன்தான் இந்த யோசனையோடவே பொருளையும் கொடுத்தான்.. இதன் விலை எவ்வளவு தெரியுமா?"

"எவ்வளவு?"

"பத்தாயிரம்.."

"சொன்னபடியே வேலை செய்யுமா?"

"என் கண் முன்னாடியே ஒரு சோதனையை பண்ணிக் காட்டிட்டானே.."

"என்ன சோதனை..?"

"ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ள துறுதுறுன்னு இருந்த எலியை ஓடவிட்டு இந்த சயனோ கார்பனை ஒரு நிமிஷம் உள்ளே வெச்சான். எலி அந்த நிமிஷமே சுருண்டு விழுந்து செத்துடுச்சு.."

"அப்படின்னா இந்த மருந்து மரணத்துக்கு உத்திரவாதமானது.."

"சந்தேகமே வேண்டாம்.."

"சரி. இந்தத்திட்டத்தை அமல்படுத்தற



பொறுப்பை நான் ஏத்துக்கறேன். இப்ப புதுசா ஒரு பிரச்னை கிளம்பியிருக்கு பாஸ்கர்.."

"என்ன...?"

"பட்டாபியைக் காணோம்னு ஒருத்தன் கம்ப்ளைண்ட் கொடுக்க.. போலீஸ் பட்டாபியைத் தேடி என்கொய்ரி பண்றதுக்காக என் கம்பெனிக்கே வந்துட்டாங்க.."

பாஸ்கர் முகம் மாறினான்.

"எப்போ..?"

"ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி.."

"என்கொய்ரி நடந்தது யார்கிட்ட..?"

"கம்பெனி மேனேஜர்கிட்ட.."

"அவர் என்ன சொன்னார்..?"

"பட்டாபி எங்கியாவது வெளியூர் போயிருக்கலாம். எதுக்கும் ரெண்டு நாள் வெயிட் பண்ணிப் பாருங்கன்னு அவர் சொல்லியிருக்கார்.."

பாஸ்கர் புன்னகைத்தான்.

"போலீஸ் பட்டாபியைத் தேடிட்டே இருக்க வேண்டியதுதான்... இந்த உலகம் பூராவும் சல்லடை போட்டு சலிச்சாலும் ம்ஹூம்.."

"பாஸ்கர்.."

"ம்.."

"பட்டாபியோட பாடியை ஒழுங்கா டிஸ்போஸ் பண்ணிட்டியா..?"

"கச்சிதமா..?"

"போலீசுக்கு ஏதாவது தடயம் கிடைச்சிடப் போவுது..?"

"தடயமா..?" பாஸ்கர் சிரித்தான்.

"பட்டாபி மேல பட்ட காத்துகூட போலீஸ் மேல படாது."

## 24

**மை**த்ரேயி சொன்னாள்.

"பாஸ்கர். யாருக்குமே தெரியாம இவ்வளவு தூரம் பிரச்னைகளைக் கடந்து வந்துட்டோம். இனியும் அதே மாதிரி கடந்துட்டாப் பரவால்ல.."

"இதோ பார் மைத்ரேயி.. உன்னையும் என்னையும் சந்தேகிக்க யார்க்கும் எந்த முகாந்திரமும் கிடையாது. நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காம ஹாஸ்பிடலுக்குப் போய் இந்த சயனோ கார்பனை வெச்சு உன் புருஷனோட கதையை முடி. அதுக்கப்புறம் ஆறுமாசமோ ஒரு வருஷமோ கழிச்சு நாம ஒரு புதுசான வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்.."

மைத்ரேயி தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள்.

"நேரமாச்சு நான் கிளம்பட்டுமா..?"

"மறுபடியும் நாம எப்ப மீட் பண்ணலாம்..?"

"நீ போன் பண்ணு பாஸ்கர்.. நான் வந்துடறேன்.."

"உன்கிட்ட இருக்கற இந்த சயனோ கார்பன் பத்திரம். அதை ஓபன் பண்ணிடாம கவனமா



இருக்கணும்.."

"கவலைப்படாதீங்க பாஸ்கர்.. ஐ வில் டேக் கேர்.."

பாஸ்கர் காரினின்றும் இறங்கிக் கொள்ள மைத்ரேயி இக்னிஷியனை உசுப்பி காரை நகர்த்தினாள்.

போக்குவரத்தில் காரை விரட்டி சிக்னல்களில் நின்று நின்று நிமிஷங்களைக் கரைத்து ஹாஸ்பிடல் வந்து சேர்ந்தபோது மணி இரவு எட்டு.

வையாபுரி மாமாவும் அத்தையும் தினேஷுக்குப் பக்கத்திலேயே இருந்தார்கள். அவளைப் பார்த்ததும் அத்தை கேட்டாள்.

"எங்கேம்மா போயிட்டே..? தினேஷ் உன்னைக் கேட்டுகிட்டே இருந்தான்.."

"நங்கநல்லூர் அனுமார் கோயிலுக்குப் போய் அவர் பேர்க்கு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வர்றேன்.."

அத்தை மலர்ந்தாள்.

"அப்படியா ரொம்ப சந்தோஷம்.. கொண்டு வந்த பிரசாதத்தை எடுத்து தினேஷோட நெத்தியில வைம்மா.. தினேஷ் சீக்கிரமே எழுந்து நடக்க ஆரம்பிச்சிடுவான்.."

மைத்ரேயி திகைத்தாள்.

"பிரசாதமா..?"

"ஆமாடியம்மா. அந்தக் கோயில்ல அர்ச்சனை பண்ணியிருந்தா பட்டர் பிரசாதம் கொடுத்திருப்பாரே..?"

"ஆ..ஆமா.. கொடுத்தா..."

"அது எங்கே..?"

"ஐயைய்யோ.. அதை அங்கேயே மறந்து வெச்சிட்டு வந்துட்டேன் போலிருக்கே.." போலியாய் கைகளை உதறிக் கொண்டு புலம்பினாள் மைத்ரேயி.

"என்னடியம்மா.. நீ.. கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு வந்திருக்கே.. ஞாபகமா பிரசாதத்தைக் கொண்டு வர வேண்டாமா..?"

வையாபுரி குறுக்கிட்டார்.

"பிரசாதம் முக்கியமில்லை. மைத்ரேயி கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு வந்ததே போதும்.."

மைத்ரேயி ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு தினேஷுக்குப் பக்கத்தில் வந்தாள்.

"என்னங்க..?"

"அவனை எழுப்பாதேம்மா.. இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முந்தி அவன் தூங்கறதுக்காக டாக்டர் ஒரு இன்ஜெக்ஷன் போட்டுட்டுப் போனார்."

"டாக்டர் வேற ஏதாவது சொன்னாரா மாமா..?"

"பயப்பட இனி எதுவுமில்லைன்னு சொன்னாரம்மா. ஒரு வாரத்துல டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போயிடலாம்னு சொன்னார்.."

"நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா..?"



"இன்னும் இல்லை.."

"நீங்களும் அத்தையும் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க மாமா.. வேலைக்காரிய சமையல் பண்ணச் சொல்லி விட்டு வந்திருக்கேன்.."

"நீ.."

"நான் பத்து மணி வரைக்கும் இவர்க்குப் பக்கத்துல இருந்துட்டு வர்றேன்.."

"ராத்திரியில இங்க யாரும் பக்கத்துல இருந்து பார்த்துக்க வேண்டாமாம்மா..?"

"வேண்டாம்னு டாக்டர் சாயந்திரமே சொல்லிட்டார். நர்ஸ் கேர் மட்டும் இருந்தாப் போதுமாம்.."

வையாபுரி மாமாவும் அத்தையும் எழுந்தார்கள்.

"அப்ப நாங்க கிளம்பறோம்.. நீ பத்து மணிக்கும் மேல ஜாக்கிரதையா வீடு வந்து சேரும்மா.."

"ம்.."

மைத்ரேயி தலையாட்ட இருவரும் கிளம்பினார்கள். ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டே மைத்ரேயி தினேஷுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் இன்ஜெக்ஷனின் உதவியோடு ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது ஸ்பஷ்டமாய் புரிந்தது.

தன் கையில் வைத்திருந்த வானிடி பேக்கை மெல்லத் திறந்து உள்ளே இருந்த சயனோ

கார்பன் பாட்டிலைப் பார்த்தாள்.

'பத்து மணிக்கு இங்கிருந்து புறப்பட்டுப் போகும்போது இதைக் கட்டிலுக்குக் கீழே இருக்கும் குறுக்குக் கம்பியில கட்டி விட்டால் போதும்..'

அறைக்கு வெளியே யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டு சட்டென்று வானிடி பேக்கை மூடினாள்.

பார்வையை உயர்த்தினாள்.

ஆக்சிடென்ட் சம்பந்தப்பட்ட கேஸைக் கவனித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன்.

"வாங்க இன்ஸ்பெக்டர்.."

"மிஸஸ் மைத்ரேயி.. உங்க கணவர் வந்த டாக்ஸி மேல லாரி மோதி இந்த விபத்து ஏற்பட்டிருக்கு. லாரி ஓனர் மேல நீங்க நஷ்ட ஈடு கேட்டுக் கேஸ் போடறதாக எண்ணம் உண்டா?"

"சர்ட்டன்லி.."

"அது சம்பந்தமா லாயரைக் கலந்து பேசிட்டீங்களா?"

"இன்னும் இல்லை.."

"அப்படி நீங்க லாயர்கிட்டப் பேசும்போது அவரைக் கட்டாயம் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க.."

"எதுக்கு..?"

"போலீஸும் இந்த கேஸைக் கோர்ட்டுக்குக்



கொண்டு போய் டிரைவருக்கு தண்டனை வாங்கித் தர விரும்புது. நீங்களும் நஷ்ட ஈடு கேட்டு கோர்ட்டுக்குப் போகப் போறீங்க.. ஒரே கேஸ் ரெண்டு பேர் மூலமா கோர்ட்டுக்குப் போகும்போது கேஸோட ஹிஸ்டரி ஒரே மாதிரி இருக்கணும்.. இல்லேன்னா கேஸ் கோர்ட்ல நிக்காது.."

"கவலைப்படாதீங்க.. நான் என்னோட லாயரை உங்ககிட்ட அனுப்பி வைக்கறேன். நீங்க டிஸ்கஸ் பண்ணிக்கலாம்."

"தேங்ஸ்.. இந்த ஃபாரங்கள்ல கொஞ்சம் கையெழுத்துப் போட்டுக் கொடுங்க.."

"எதுக்கு..?"

"இதெல்லாம் ஆக்சிடென்ட் சம்பந்தப்பட்ட ஸ்டேட்மென்ட்ஸ். நியாயப்படி உங்க கணவர்தான் கையெழுத்துப் போடணும். அவர் இப்போ போடக்கூடிய நிலைமைல இல்லாததனால அவர் சார்பா நீங்க கையெழுத்தைப் போடப் போறீங்க.. தட்ஸ் ஆல்.."

இன்ஸ்பெக்டர் கையில் வைத்திருந்த ஸ்டேட்மென்ட் காப்பிகளை நீட்ட.. மைத்ரேயி வாங்கி கையெழுத்துகளைப் போட்டுக் கொடுத்தாள்.

"தேங்க் யூ.. மிஸஸ் மைத்ரேயி.."

வாங்கிக் கொண்டு நகர்ந்தார் இன்ஸ்பெக்டர்.

பயம் அடிவயிற்றைப் பிசைந்தது.

* * * * *

ராத்திரி ஒன்பதே முக்கால் மணிக்கு மைத்ரேயி தன் வானிடி பேக்கில் இருந்த சயனோ கார்பன் இருந்த கண்ணாடிக் குப்பியை வெளியே எடுத்து வில்லையின் கழுத்துக்குக் கீழே ஒரு சிறிய நூலைக் கட்டி கட்டிலுக்குக் கீழே குனிந்து குறுக்குக் கம்பியில் கட்டிவிட்டு பாட்டிலை எடுத்து பைக்குள் போட்டுக் கொண்டாள்.

பின் எழுந்து நர்ஸை அழைப்பதற்கான காலிங் பெல்லை அழுத்த அது வீறிட்டது.

சில விநாடிகளில் நர்ஸ் வந்தாள்.

மைத்ரேயி சொன்னாள்.

"நான் வீட்டுக்குக் கிளம்பறேன்.."

"நீங்க போங்கம்மா.. அவரை இனி யாரும் பார்த்துக்க வேண்டியதில்லை. அவர்க்கு இப்போ போட்டிருக்கற இன்ஜெக்ஷன் காலை ஆறு மணி வரைக்கும் அவரைத் தூங்க வைக்கும். நாங்களும் அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை வந்து பார்த்துக்குவோம். நீங்க போயிட்டு நாளைக்குக் காலைல வாங்கம்மா.."

மைத்ரேயி நகர்ந்தாள்.

"டாக்டர் ரூம்ல இருக்காரா..?"

"வீட்டுக்குப் போயிட்டார்மா.. அவர்கிட்ட ஏதாவது சொல்லணுமா..?"

"இல்லை.. சும்மாதான் கேட்டேன்." சொல்லிவிட்டு மைத்ரேயி அறையினின்றும் வெளிப்பட்டு வ்ராந்தாவில் நடந்து போர்டிகோவில் நின்றிருந்த காருக்கு வந்தாள்.



இதயத்துக்குள் இப்போது ஒரு படபடப்பு அரும்பி கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்பட ஆரம்பித்தது.

'பாஸ்கர் சொன்னபடி அந்த சயனோ கார்பன் செயல்பட்டு கணவரின் மூச்சை நிறுத்துமா..?'

'அப்படி நிறுத்தினாலும் அது டாக்டர்கள் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு துல்லியமாய் அமையுமா?'

காரை விரட்டும்போதும் சரி வீடு வந்து சேர்ந்தபோதும் சரி.. மனசுக்குள் பயத்தின் கனம்.

கதவைத் திறந்துவிட்ட வையாபுரி மாமா கேட்டார்.

"என்னம்மா.. முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு..? தினேஷுக்கு மறுபடியும் உடம்பு சரியில்லாமப் போயிடுச்சா..?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை மாமா.. அவர் நல்லாதான் இருக்கார். எனக்குதான் பயமா இருக்கு.."

"எதுக்கம்மா பயப்படறே..? தைரியமா இரு.. தினேஷுக்கு ஒண்ணும் ஆகாது.."

மைத்ரேயி சோபாவில் போய் உட்கார்ந்தாள்.

"போய் சாப்பிடும்மா.."

"வேண்டாம் மாமா.. எனக்குப் பசியில்லை... ஒரு தூக்க மாத்திரையைப் போட்டுட்டுத் தூங்கப் போறேன். எனக்கு ஏதாவது போன் வந்தாக்கூட எழுப்பாதீங்க.."

"சரிம்மா. நீ போய் படுத்து நல்லா ரெஸ்ட் எடுத்துக்க.."

மைத்ரேயி கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி பத்ரே முக்கால்.

'இந்நேரம் சயனோகார்பன் காற்றில் கரைந்து தன்னுடைய வேலையைக் காட்டிக் கொண்டிருக்கும்..'

## 25

**மைத்**ரேயிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கொட்டக் கொட்ட விழித்தபடி படுக்கையில் சாய்ந்திருந்தாள்.

ஹால் கடிகாரம் அரைமணிக்கொரு தடவை பெண்டுலத்தை அடித்து ஒலி எழுப்பியது.

மணி ஒன்று அடித்தபோது ஹாலின் டெலிபோன் அலறிக் கூப்பிட்டது.

திடும்மென்று எழுந்து உட்கார்ந்தாள்.

'போன் யாரிடமிருந்து..?'

'ஹாஸ்பிடலிலிருந்தா..?'

'இல்லை.. பாஸ்கரிடமிருந்தா..?'

அறைக் கதவை வேகமாகத் திறந்து கொண்டு போய் டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ."

போன் ஹாஸ்பிடலிலிருந்துதான்.. ஒரு நர்ஸ் பேசினாள்.



"மேடம்.. நீங்க உடனே ஹாஸ்பிடலுக்கு வர முடியுமா?"

"ஏன்.. என்ன விஷயம்..?"

"வ..ந்து.. வந்து..."

"அவர் உடம்புக்கு ஏதாவது முடியலையா..?"

"ஆமா.. மூச்சுத் திணறல்.. மைல்ட் ஹார்ட் அட்டாக். டாக்டர் உங்களுக்கு உடடினயா இன்பார்ம் பண்ண சொன்னார்.. புறப்பட்டு வர்றீங்களா..?"

"இதோ.."

மைத்ரேயி ரிசீவரை வைத்தாள். மனசுக்குள் சந்தோஷம் பட்டாம்பூச்சியாய் மாறிப்பறந்தது.

'சயனோகார்பன் தன் வேலையைக் காட்டி விட்டது..'

"போன் யார்கிட்டேருந்தும்மா..?" மாடிப் படிகளில் தூக்கக் கலக்கத்தோடு இறங்கி வந்த வையாபுரி கேட்டார்.

"ஹாஸ்பிடலிலிருந்து நர்ஸ் போன் பண்ணினா மாமா.. அவர்க்கு ஏதோ மைல்ட் ஹார்ட் அட்டாக்காம்.."

வையாபுரி பதறிக்கொண்டு கீழே வந்தார்.

"சீரியஸா எதுவும் இல்லையே..?"

"அந்த நர்ஸ் சரியா பதில் சொல்லலை மாமா.. ஹாஸ்பிடலுக்குப் போய் பார்த்தாதான் உண்மை நிலவரம் தெரியும்.."

"நீ போய் காரை எடு.. நான் அத்தையை எழுப்பிக் கூட்டிட்டு வர்றேன்.."

மறுபடியும் மாடிக்கு ஓடினார் வையாபுரி.

*****

அந்த நள்ளிரவு நேரத்தில் காரை விரட்டிக் கொண்டு ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்தபோது ஒன்று முப்பது மணி. காரிலிருந்து இறங்கி வராந்தாவில் மூன்று பேரும் ஓடினார்கள். நர்ஸ் எதிர்ப்பட்டாள்.

"ஐ.ஸி. யூனிட்டுக்குப் போங்க.."

"அவர்க்கு இப்போ எப்படியிருக்கு..?"

"வெரி சீரியஸ்.. டாக்டர்ஸ் உள்ளே ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்காங்க. உள்ளே போய் தொந்தரவு கொடுத்துராதீங்க ப்ளீஸ்."

பதட்டமாய் ஐ.ஸீ. யூனிட்டுக்குப் போனார்கள். யூனிட்டுக்குள் டாக்டர்கள் இருப்பதற்கு அறிகுறியாய் கதவின் நெற்றியில் பொருத்தப்பட்டிருந்த சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மைத்ரேயி செயற்கைக் கவலையோடு அங்கேயிருந்த ஒரு நாற்காலியில் உட்கார, வையாபுரியின் மனைவி அழ ஆரம்பித்து விட்டாள்.

"என்னங்க இது அநியாயம்.. ராத்திரி போகும்போது தினேஷ் நல்லாத்தானே இருந்தான்...?"

"தைரியமா இரு.. தினேஷுக்கு ஒண்ணும் ஆகாது.." வையாபுரி, மனைவிக்கு ஆறுதல்



சொன்னாலும் அவரும் கலங்கித்தான் போயிருந்தார்.

அரை மணி நேரக் காத்திருப்புக்குப் பின் -

ஐ.ஸி. யூனிட் கதவு மெல்லத் திறந்தது. டாக்டரின் முகம் கொஞ்சமாய் எட்டிப் பார்த்து மைத்ரேயியை மட்டும் கூப்பிட்டது.

"மைத்ரேயி.. நீங்க மட்டும் உள்ளே வாங்க.."

போனாள்.

கதவை அவளை உள்வாங்கிக் கொண்டு மூடிக் கொண்டது. டாக்டர்கள் இரண்டு பேர் மரக்கட்டையாய்ப் படுத்துக் கிடந்த தினேஷுக்கு தீவிர சிகிச்சை கொடுத்துக் கொண்டிருக்க..

சீப் டாக்டர் மைத்ரேயியை ஏறிட்டார்.

"ஸாரி.. டு ஸே திஸ் மிஸஸ் மைத்ரேயி.. உங்க கணவர் இறந்துட்டார். இப்போ செயற்கை முறையில சுவாசம் கொடுத்துட்டு இருக்கோம். இதையே ரொம்ப நேரத்துக்குக் கொடுக்க முடியாது.."

அவள் மனசுக்குள் ஒரு தீபாவளி சந்தோஷம் இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் கண்களில் போலி அதிர்ச்சியை வெளிப்படுத்தி, சுவர்க்குச் சாய்ந்து முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

டாக்டர் புன்னகையோடு அவளுடைய தோளை நிமிர்த்தினார்.

"மிஸஸ் மைத்ரேயி.."

அவள் நிமிர்ந்தாள்.

"உங்க கணவர்க்கு திடீர்னு ஹார்ட் அட்டாக் வரக் காரணம்.. அவரோட அறைக்குள்ளே வைக்கப்பட்டிருந்த ஒரு இரசாயனப் பொருள்தான்."

மைத்ரேயி திடுக்கிட்டாள்.

"இரசாயனப் பொருளா..?"

"எஸ். அது ஒருவகை இன்விஸிபில் ஸ்மோக்கி பாய்ஸன். அதை யாரோ இந்த ரூம்ல வெச்சிட்டுப் போயிருக்காங்க.."

"யா.. யா.. யாரு...?"

"அதை நீங்கதான் சொல்லணும்..?"

"நா.னா..?"

"எஸ்.. நீங்களேதான்.."

அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு போலிக் கோபம் காட்டினாள் மைத்ரேயி.

"எ..எனக்..கெப்படித் தெரியும்..?"

டாக்டர் இப்போது பெரியதாகப் புன்னகைத்தார்.

"இனிமே நான் நேரிடையாகவே விஷயத்துக்கு வர்றேன். நேத்து ராத்திரி கட்டிலோட குறுக்குக் கம்பியில இந்த இரசாயனப் பொருளைக் கட்டி விட்டது நீங்கதானே..?"

கையில் வைத்திருநத ஒரு சின்ன



பாட்டிலை உயர்த்திக் காட்டினார் டாக்டர்.

பாட்டிலுக்குள்ளே பாஸ்கர் கொடுத்த சயனோகார்பன் கரையாமல் அப்படியே இருந்தது.

மைத்ரேயியின் முகம் வியர்த்து பிசுபிசுத்தது.

"இ... இ.. இது..?"

டாக்டர் சிரித்தார்.

"காத்துல கரைஞ்சு உங்க கணவரோட உயிரைப் பறிக்கறதுக்கு முந்தியே இது எங்க பார்வைக்குக் கிடைச்சிடுச்சு."

மைத்ரேயி உறைந்துபோய் நின்றிருக்க.. இப்போது ஐ.ஸி. யூனிட்டின் கதவு மெல்லத் திறந்தது. இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்தார். பார்த்த பார்வையில் ஒரு விஷமச் சிரிப்பு ஒட்டியிருந்தது.

"மேடம்.. என்னை உங்களுக்குத் தெரியாது. நேத்து சாயந்திரம் உங்க கம்பெனிக்கு காணாமப் போன பட்டாபியைத் தேடி வந்தேன். அப்ப மேனேஜரைப் பார்த்து விசாரிச்சேன். சரி. விஷயத்துக்கு வர்றேன். நேத்து ராத்திரி உங்க கார்ல விஷம் குடிச்சு சீரியஸான நிலைமையில் இருந்த ஒரு பெண்ணை ஜி.ஹெச்ல கொண்டு வந்தீங்க இல்லையா..?"

மைத்ரேயி அதிர்ந்தாள். தலை தன்னிச்சையாய் 'ஆமாம்' என்றது.

"அந்த சமயத்துல உங்ககூட கார்ல

இருந்தவர் யார்னு சொல்ல முடியுமா?"

"அ··அது வ.ந்து.."

"சும்மா சொல்லுங்க.."

"தெ..தெரிஞ்ச...வர்."

"தெரிஞ்சவர்னா யாரு?"

மைத்ரேயிக்கு வியர்த்துக் கொண்டு வந்தது. அவள் மௌனமாய் இருக்க.. கதவு மறுபடியும் திறந்து ஒரு கான்ஸ்டபிளோடு தலைகுனிந்தபடி உள்ளே வந்தான் பாஸ்கர்.

பெரிய அதிர்ச்சிக்கு உள்ளானாள் மைத்ரேயி.

"அம்மா மைத்ரேயி.. என்னை உங்களுக்குத் தெரியுதா..?"

மைத்ரேயி விழிக்க.. கான்ஸ்டபிள் தொடர்ந்தார்.

"அம்மா.. விஷம் குடிச்சு சீரியஸான நிலைமையில் இருந்த பெண்ணை நீங்க ஹாஸ்பிடலுக்குக் கொண்டு வந்தீங்க. அப்போ வேறு ஒரு தற்கொலை கேஸ் விஷயமா நான் ஹாஸ்பிடல் வாசல்ல இருந்தேன். அப்ப உங்களை விசாரணை பண்ணினது நான்தான்.."

கான்ஸ்டபிள் பேச்சை நிறுத்த இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டுப் பேசினார்.

"பட்டாபி காணாமப் போனது சம்பந்தமா என்கொய்ரி பண்ண என்கூட உங்க கம்பெனிக்கு இந்த கான்ஸ்டபிளும் வந்தார்.



வந்தவர் அங்கே இருந்த மேனேஜரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது மைத்ரேயி ஓனரோட மனைவின்னு தெரிஞ்சதும், அவங்களும் பாஸ்கர்னு ஒருத்தரும் நேத்து ராத்திரி ஜி.ஹெச் வந்ததாகச் சொன்னார். எனக்கு லேசான சந்தேகம் வந்தது. பிறகு இங்கே வேலை செய்யற பட்டாபியைக் காணோம்னு புகார் வந்திருக்கற இந்த நேரத்துல ஓனரோட மனைவி மைத்ரேயியும், பாஸ்கர்னு ஒருத்தரும் எதற்காக நள்ளிரவு நேரத்துல போனாங்க. எங்க போனாங்கன்னு யோசிச்சேன். ஏதோ தப்பு நடக்குதுன்னு முடிவு பண்ணி உங்க ரெண்டு பேரையும் மப்டில சிலபேரை பாலோவ் பண்ண வெச்சேன்.

ஸ்டோர்ஸ்ல, பார்க்ல நீங்க நின்னதும் பாஸ்கரைச் சந்திச்சுப் பேசினதும் ஒரு சின்ன பாட்டிலை அவர்கிட்ட இருந்து வாங்கினதும் அப்பப்ப எங்களுக்கு தகவல்கள் வந்துட்டே இருந்தது. உடனே கான்ஸ்டபிளிடம் உங்களை ஹாஸ்பிடலுக்கு வந்தா க்ளோஸா பாலோவ் பண்ணச் சொல்லியிருந்தேன். அவங்களும் உங்க மேல சந்தேகப்படாதபடி நடவடிக்கையை ஆரம்பிச்சாங்க.

அதே சமயத்துல கான்ஸ்டபிள் பாஸ்கரை பாலோவ் பண்ணி மடக்கி ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தார். பாஸ்கரை லாக்கப்ல வெச்சு விசாரிச்சோம். போலீஸ் ட்ரீட்மென்ட் ஆரம்பிச்சதும் அத்தனை உண்மைகளையும் கொட்டிட்டார். ஹாஸ்பிடல்ல நீங்க வெச்சிட்டுப்போன சயனோ கார்பனை டாக்டர்ஸ் ரிமூவ் பண்ணி தினேஷை ரூம்

மாத்திட்டாங்க. உடம்புல எந்தப் பிரச்னையும் இல்லை. இப்போதும் அவர் நல்லாதான் தூங்கிட்டிருக்கார். நீங்க அவர்க்குப் பண்ணின துரோகமோ, உங்களை நாங்க பிடிச்சதோ அவர்க்கு எதுவுமே தெரியாது. நாளைக்கு அவர் கண் விழிக்கும்போது உண்மைகள் தெரிய வரும்.."

மைத்ரேயியின் பார்வை கண்ணீர் நனைந்த கண்களோடு தினேஷ் படுத்திருந்த கட்டிலை நோக்கித் தயக்கமாய்ப் போயிற்று.

மனசு படபடத்தது. சுற்றியிருப்பவர்களின் பார்வை தன்னையே துளைப்பதை அறிந்து உடம்பு கூசியது. ஆனால் தினேஷோ ஒரு குழந்தையைப் போல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

'நாளைக்குக் காலைல உண்மைகள் தெரியும்போது நான் அவர் பார்வைக்கு குப்பையாய்த் தெரிவேன்..'

மைத்ரேயியின் மனசு கனத்தது. இன்ஸ்பெக்டர் அவளிடம் குனிந்தார்.

"மேடம். மத்த விஷயங்களை ஸ்டேஷன்ல போய் பேசிக்கலாமா..?"

பாஸ்கரையும், மைத்ரேயியையும் ஜீப்புக்கு நகர்த்திக் கொண்டு போனார் இன்ஸ்பெக்டர்.

'வசமாக மாட்டிக்கொண்டோமே!' என்ற குற்ற உணர்வோடு ஒருவரையொருவர் பார்த்தவாறே வெவ்வேறு ஜீப்களில் ஏறினார்கள் பாஸ்கரும் - மைத்ரேயியும்.

(முற்றும்)



# நீயிருக்கும் நெஞ்சமடி...

③

தி. கிருபாகரன்



அன்று வேலை அதிகம் இல்லை. ஒரே ஒரு புத்தகத்தை புரூப் பார்த்துக் கொண்டிருந்தேன். நண்பர் ஒருவர் எழுதின கவிதைத் தொகுப்புப் புத்தகம் அது. அந்தக் கவிதைகளைப் படிக்கப் படிக்க என் மனம் எதை எதையோ நினைத்துக் கொண்டிருந்தது. மதியம் சாப்பிடவில்லை. ஏனோ பசிக்கவும் இல்லை.

இந்த வேதனை எதற்கு? என்ன செய்தால் இந்த வேதனை நீங்கும்? மைதிலியிடம் என் காதலைச் சொல்லிவிட்டால் நீங்குமா? அல்லது மைதிலி என்னைக் காதலித்தால் நீங்குமா? அல்லது திருமணம் செய்து கொண்டால் போகுமா? திருமணம் செய்து கொண்டால் போகும் என்றால் மைதிலியைத் திருமணம் செய்து கொண்டால் போகுமா அல்லது வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் போகுமா? குழப்பத்தில் மனம் ஒரு நிலையில் இல்லை.

மீண்டும் கவிதைத் தொகுப்பைப் படிக்கலானேன். நிறைய காதல் கவிதைகள் இடம் பெற்றிருந்தன. அனைத்தும் சோகக் கவிதைகள் தான். ஒரு வேளை காதல் தோல்வியோ? யாரைக் காதலித்திருப்பார்? என்ன ஆகியிருக்கும்? என்னைப் போலவே மனதுக்குள் அழுது கொண்டிருக்கிறாரா? அவரைப் பார்த்தால் அதைப் பற்றிக் கேட்க